13TH APRIL 2026

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 103 | பக்கங்கள் - 14 | editor.uthayam@gmail.com

# ஹோர்மூஸ் நீரிணை முற்றுகை மிக விரைவில் ஆரம்பம்

## அப்பட்டமான கடற் கொள்ளை

## சீறிப் பாயும் ஈரான் இராணுவம்

## எம்மீது கைவைத்தால் பிராந்தியத்தின் ஒரு துறைமுகமும் மிஞ்சாது

### IRGC அதிரடி

ஹோர்மூஸ் நீரிணைப் பகுதியில் ஈரானிலிருந்து வந்து போகக் கூடிய கப்பல்களுக்கெதிரான முற்றுகைப் போராட்டம் ஆரம்பமாகி உள்ளதாகவும் இந்த வழியாக ஈரானிலிருந்து வரக்கூடிய ஈரானுக்கு செல்லக் கூடிய சகல கப்பல்களும் இலக்கு வைக்கப்படுமென்றும் அமெரிக்கா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முற்றுகையை எதிர் கொள்ளத் தாம் தயாராக இருப்பதாகவும் அமெரிக்க அச்சுறுத்தல்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படுமென்றும் ஈரானிய புரட்சிகர படைப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில மணிநேரங்களில் ஈரானிய கப்பல்கள் மீது முழுமையான முற்றுகையை அமெரிக்க கடற்படை நடைமுறைபடுத்தும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

பிற நாடுகளுக்கு அனுமதி அமெரிக்க மத்திய புலனாய்வு

02ம் பக்கம்பார்க்க...

## ஜப்பானில் பலஸ்தீன் ஆதரவுப் போக்கு இஸ்ரேலியர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள்

மத்திய கிழக்கில் நிலவும் தீவிரப் போர்ச் சூழல் மற்றும் இராஜதந்திர நெருக்கடிகளுக்கு மத்தியில், ஜப்பான் தனது நாட்டிற்கு வரும் இஸ்ரேலியச் சுற்றுலாப் பயணிகளுக்குக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள்ளன.

02ம் பக்கம்பார்க்க...

## டிரம்பின் மிரட்டல்களுக்கு நான் அஞ்ச மாட்டேன்

### அமெரிக்கரான பாப்பரசர் லியோ கருத்து

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தன்னை விமர்சித்த போதிலும், தான் எதற்கும் அஞ்சப்போவதில்லை என கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் லியோ ஓஜஏ (Pope Leo XIV) தெரிவித்துள்ளார். அல்ஜீரியாவுக்கான தனது 10 நாள் ஆப்பிரிக்கப் பயணத்தின்

02ம் பக்கம்பார்க்க...

## முற்றுகை அச்சுறுத்தல்களுக்கு நாம் அடிபணிய மாட்டோம்; எமது பொறுமையைச் சோதித்தால் விளைவு கடுமையாக இருக்கும்

### ஈரான் சபாநாயகர் அதிரடியான கருத்து


அமெரிக்காவின் எத்தகைய அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள நாம் தயாராக உள்ளோம் என ஈரான் நாடாளுமன்ற சபாநாயகரும் இஸ்லாமாபாத் அமைதிப் பேச்சுக் குழுவுக்குத் தலைமை வகித்தவருமான முஹம்மத் பாகர் காலிபாப் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தனது உரையின் மற்றொரு பகுதியில் காலிபாஃப், "தாங்கள்

02ம் பக்கம்பார்க்க...

## எவ்வளவு அழுத்தங்கள் வந்தாலும் நீரிணை முற்றுகைக்கு ஆதரவில்லை



### பிரிட்டிஷ் பிரதமர் திட்டவட்டம்

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே போர் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், பிரிட்டன் எக்காரணம் கொண்டும் இந்தப் போருக்குள் இழுக்கப்படாது என அந்நாட்டு பிரதமர் கீர் ஸ்டார்மர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அளவில் எவ்வளவு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டாலும், பிரிட்டன் இந்த மோதலில் ஒரு தரப்பாகப் பங்கேற்காது என்று அவர் உறுதியளித்துள்ளார்.

குறிப்பாக, ஹார்முஸ் நீரிணையை முற்றுகையிடும் அமெரிக்காவின் திட்டத்திற்குப் பிரிட்டன் தனது ஆதரவை வழங்கவில்லை என்பதையும் அவர்

02ம் பக்கம்பார்க்க...

## கொழும்புத் துறைமுகத்தில் பாகிஸ்தான் போர்க் கப்பல்கள்




(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

பாகிஸ்தான் கடற்படையின் 'PNS TAIMUR' மற்றும் 'PNS ASLAT' ஆகிய போர்க்கப்பல்கள் நல்லெண்ண வருகைக்காக நேற்று (12) கொழும்பு துறைமுகத்திற்கு வந்தடைந்ததையடுத்து, இலங்கை

02ம் பக்கம்பார்க்க...

## மோதல்களைத் தணிக்க; உதவுவதற்குத் தயார்



### - புடின் அறிவிப்பு -

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவி வரும் தொடர் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரவும், ஒரு அரசியல் மற்றும்

02ம் பக்கம்பார்க்க...

## நிலக்கரி விலைமனு கோரல் முறைகேடு

### முஜீபுர் சீ.ஐ.டியில் முறைப்பாடு!

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் இன்று (13) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில்

02ம் பக்கம்பார்க்க...

## காஸா மக்களைக் காப்பாற்ற இஸ்ரேலுக்குள் நுழைவோம்



### எர்துகான் எச்சரிக்கை!

லிபியா மற்றும் கராபக்கிக்குள் நுழைந்தது போல இஸ்ரேலுக்குள்ளும் நுழைவோம் என துருக்கிய அதிபர் எர்துகான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

02ம் பக்கம்பார்க்க...

## ஹோர்மூஸ் நீரிணை முற்றுகை எம்மை யாரும் தடுக்க முடியாது

### நிலைமைகளை உன்னிப்பாக அவதானிக்கின்றோம்

### சீனப் பாதுகாப்பு அமைச்சர் டோங் கின்!

உலகில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு நாங்கள் உறுதியுடன் இருக்கிறோம். மத்திய கிழக்கின் நிலைமையை

02ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

### ஹோர்மூஸ்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வெளியிட்டுள்ள தகவலின் படி, அமெரிக்க நேரப்படி, ஏப்ரல் 13ஆம் திகதி காலை 10 மணி முதல் இந்த முற்றுகை ஆரம்பமாகவுள்ளது. (தற்போது அமெரிக்காவில் நேரம் - காலை 06:55)

மத்திய புலனாய்வின் அறிவிப்பில், ஈரானிய துறைமுகங்களுக்கு முழுமையான கடற்படை முற்றுகையை அமெரிக்கப் படைகள் நடைமுறைப்படுத்த தொடங்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் ஈரானுக்குச் செல்லும் அல்லது ஈரானிலிருந்து வரும் கப்பல்களைத் தவிர மற்ற சர்வதேச கப்பல்கள் ஹோர்மூஸ் நீரிணை வழியாகத் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படும் என்றும் மத்திய புலனாய்வு தெரிவித்துள்ளது.

### முற்றுகை...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அமெரிக்கர்களை நம்பவில்லை" என்று தெஹ்ரான் ஆரம்பத்திலிருந்தே கூறிவந்ததாகவும், ஓராண்டுக்கும் குறைவான காலத்தில் பேச்சுவார்த்தைகளின்போது அவர்கள் ஈரானை இருமுறை தாக்கியதால், ஈரானின் நம்பிக்கையை அவர்கள் "சம்பாதிக்க" வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இந்த ஆண்டு பெப்ரவரி 28 அன்று தொடங்கிய போரும், கடந்த ஆண்டு ஜூன் மாதம் நடந்த 12 நாள் போரும், ஈரானின் நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டு வரும் அணுசக்தித் திட்டம் குறித்து ஈரானும் அமெரிக்காவும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தபோது தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.

### ஜப்பானில்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஜப்பான் அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக ஒரு முழுமையான "சுற்றுலாத் தடையை" அறிவிக்கவிட்டாலும், அண்மைக்காலமாக அங்கு நிலவும் சில முக்கிய நிகழ்வுகள் இந்தக் கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்துகின்றன:

ஜப்பானின் கியோட்டோ (Kyoto) மற்றும் நாகானோ (Nagano) போன்ற பகுதிகளில் உள்ள சில ஹோட்டல்கள், இஸ்ரேலியச் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிடம் வழங்க மறுத்துள்ளன.

காசாவில் இஸ்ரேலிய ராணுவம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் அதனால் ஏற்படும் "போர்க்குற்ற" புகார்கள் காரணமாக, இஸ்ரேலிய ராணுவத்துடன் தொடர்புடைய எவருக்கும் இடமளிக்க முடியாது என ஹோட்டல் நிர்வாகங்கள் தெரிவித்துள்ளன.

இது ஜப்பானிய சட்டங்களுக்கு (Inns and Hotels Act) எதிரானது என்று கூறி, கியோட்டோ நகர நிர்வாகம் அந்த ஹோட்டல்களுக்குக் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரான்-அமெரிக்கா போர் மற்றும் லெபனான் மீதான இஸ்ரேலியத் தாக்குதல்கள் குறித்து ஜப்பான் தனது "ஆழ்ந்த கவலை" (Serious Concern) -ஐத் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 10 அன்று ஜப்பான் வெளியுறவுத்துறை வெளியிட்ட அறிக்கையில், லெபனானில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், சர்வதேச சட்டங்களை மதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இத்தகைய இராஜதந்திர அழுத்தங்கள், ஜப்பானிய உள்நாட்டு நிறுவனங்கள் இஸ்ரேலியர்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்கத் தூண்டுதலாக இருக்கலாம் எனப் பார்க்கப்படுகிறது.

2026-ஆம் ஆண்டு முதல், ஜப்பானில் சுற்றுலாப் பயணிகளாக வரும் வெளிநாட்டினர் அங்கு ஜப்பானிய மொழித் தேர்வை (JLPT) எழுத முடியாது என்பது போன்ற பொதுவான விதிகளும் நடைமுறைக்கு வந்துள்ளன. இது குறிப்பாகச் சுற்றுலா விசாவில் வருபவர்களைப் பாதிக்கிறது.

ஜப்பான் பாரம்பரியமாகவே ஒரு நடுநிலை நாடாக இருக்க விரும்புகிறது.

ஆனால், மத்திய கிழக்கில் போர் தீவிரமடைந்துள்ள சூழலில், தனது நாட்டில் சட்டம்-ஒழுங்கு பாதிப்பைத் தவிர்க்கவும், சர்வதேச அளவில் பாலஸ்தீன ஆதரவு நாடுகளின் கோபத்திற்கு ஆளாகாமல் இருக்கவும் இத்தகைய மென்மையான கட்டுப்பாடுகளை (Soft Restrictions) ஜப்பான் கையாளுவதாகத் தெரிகிறது.

### டிரம்பின்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஒரு பகுதியாக விமானத்தில் பயணிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

"நான் ஒரு அரசியல்வாதி அல்ல, திருச்சபையின் பணியே அமைதியைப் பரப்புவதுதான். எனவே, டிரம்ப் நிர்வாகத்துடன் அரசியல் ரீதியான விவாதத்தில் ஈடுபட எனக்கு விருப்பமில்லை" என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், ஈரான் போர் மற்றும் உலகளாவிய மோதல்களால் மக்கள் படும் துன்பங்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற தனது அழைப்பை அவர் மீண்டும் வலியுறுத்தினார். போப் லியோ XIV அமெரிக்காவில் பிறந்தவர் என்பதுடன், அல்ஜீரியாவுக்குச் செல்லும் முதல் போப் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவருடைய இந்தத் துணிச்சலான கருத்துகள் தற்போது உலகளாவிய ஊடகங்களில் பேசுபொருளாகியுள்ளன.

### எவ்வளவு...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தெளிவுபடுத்தியுள்ளார்.

உலகளாவிய எரிசக்தி விநியோகத்தைப் பாதிக்கும் இத்தகைய முற்றுகைகளைத் தவிர்க்க வேண்டும் என்பதில் பிரிட்டன் உறுதியாக உள்ளது. போரைத் தவிர்த்து இராஜதந்திர ரீதியாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதையே தமது அரசாங்கம் விரும்புவதாக ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

### ஹோர்மூஸ்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ராஜதந்திர ரீதியிலான தீர்வை எட்டவும் ரஷ்யா உதவத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கிரெம்ளின் மாளிகை வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிக்கையில், பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிப்பதற்கும், சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு இடையே பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கும் ஒரு இடைத்தரகராக செயல்பட ரஷ்யா முன்வந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### காஸா...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

காஸா மக்களுக்கெதிரான அட்டூழியங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

அதற்காக எமது பலத்தை வெளிக்காட்டத் தயாராக இருக்கின்றோம்.

அதற்காக தேவையேற்படின் இஸ்ரேலுக்குள் நுழையவும் தயாராக உள்ளோம் என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

### ஹோர்மூஸ்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நாங்கள் கண்காணித்து வருகிறோம்.

எங்கள் கப்பல்கள் ஹார்மூஸ் ஜலசந்தியின் கடல் பகுதிக்குள் சென்று வருகின்றன.

ஈரானுடன் எங்களுக்கு வர்த்தகம் மற்றும் எரிசக்தி ஒப்பந்தங்கள் உள்ளன.

நாங்கள் அவற்றை மதித்து நடப்போம், மற்றவர்கள் எங்கள் விவகாரங்களில் தலையிடக்கூடாது என்றும் எதிர்பார்க்கிறோம்.

ஹார்மூஸ் ஜலசந்தி ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ளது,

அது எங்களுக்குத் திறந்தே இருக்கிறது." - சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் டோங் ஜுன் தெரிவித்துள்ளார்.

### நிலக்கரி...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

முறைப்பாடு ஒன்றை அளித்துள்ளனர்.

நிலக்கரிக்கான விலை மனு கோரலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்துமாறு கோரியே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த விலை மனுவை ஜனாதிபதிக்கு நெருக்கமான ஒருவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட விதம் தொடர்பான குரல் பதிவு ஒன்று வெளியாகியுள்ளதாகத் தெரிவித்து, இந்த முறைப்பாட்டை அவர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கருத்து தெரிவிக்கையில்,

ஒரு குரல் பதிவு வெளியாகியுள்ளது. அதைக் கேட்கும்போது அங்கேயும் ஒரு மோசடி நடந்துள்ளது என்பது புரிகிறது.

ஜனாதிபதிக்கு மிக நெருக்கமான ஒருவருக்கு இந்த டெண்டரை வழங்க வேண்டும் என்பது தொடர்பான கலந்துரையாடல் அந்த குரல் பதிவில் உள்ளது.

எனவே, அந்த குரல் பதிவு மற்றும் அதில் இடம்பெற்றுள்ள விடயங்கள் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு கோரி இன்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளோம்.

அந்த குரல் பதிவில் ஜனாதிபதியின் பெயர் மற்றும் அவருக்கு மிக நெருக்கமான தொழிலதிபர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

இதன் மூலம் அங்கேயும் தெளிவாக ஒரு மோசடி நடந்துள்ளது என்பது உறுதியாகிறது.

### கொழும்புத்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கடற்படை தனது கடற்படை மரபுகளின்படி கப்பல்களை வரவேற்றது.

கொழும்புத் துறைமுகத்திற்கு வந்தடைந்துள்ள " 'PNS TAIMUR' கப்பலின் கட்டளை அதிகாரியாக கெப்டன் NIAMAT SAEED KHAN ck; 'PNS ASLAT' கப்பலின் கட்டளை அதிகாரியாக கெப்டன் NADIR MATEEN AFRIDI உம் உள்ளனர்.

மேலும், இந்தக் கப்பல்கள் இலங்கை கடற்படையுடன் இருதரப்பு கடற்படைப் பயிற்சியில் (Bilateral Naval Exercise LION STAR V) ஈடுபடவும் திட்டமிடப்பட்டுள்ளன.



# பாடசாலை மாணவர்களுக்கான காலணி வவுச்சருக்கு பதிலாக காலணிகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்






(எம்.எச்.எம்.சியாஜ்)

2026 ஆம் ஆண்டிற்காக மேல் மற்றும் தெற்கு மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்குக் காலணி வவுச்சர்களுக்குப் பதிலாக, உள்நாட்டு விநியோகஸ்தர்கள் ஊடாக நேரடியாகக் காலணிகளைப் பெற்றுக்கொடுக்கும் பரீட்சார்த்தத் திட்டம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று வியாழக்கிழமை (09) பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

காலணிகளின் தரத்தை உறுதிப்படுத்துதல், உற்பத்தி மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் பாடசாலைகளுடனான ஒருங்கிணைப்பின் போது ஏற்படும் சிக்கல்கள் குறித்து இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

பிள்ளைகளுக்கு வழங்கப்படும் காலணிகள் உயர்ந்த தரத்திலான உற்பத்திகளாக இருக்க வேண்டும் என்பதையும், இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய மாகாணங்கள், காலணிகளின் விலை விவரம் உள்ளிட்ட அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கிய திட்ட முன்மொழிவொன்றைச் சமர்ப்பிக்குமாறு உள்நாட்டு காலணி உற்பத்தியாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பாணந்துறை ஜீலானில் பழைய மாணவர் சங்கக் கூட்டம்







(பரீட் இக்பால்)

பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரியில் 2026 /2027 ஆண்டிற்கான பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் அண்மையில் கல்லூரி அதிபர் ஏ.எம். ஹலீம் மஜீத் தலைமையில் உம்முல் மலீஹா மண்டபத்தில் நடைபெற்றது.

பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராக எஸ்.ஏ.ஸி. இம்தாத், பழைய மாணவிகள் சங்கத்தின் செயலாளராக பஸ்னா இக்பால் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் உப செயலாளராக ரிஷ்னி அஹமட், பொருளாளராக எம்.என்.எம். நப்ரின், உப பொருளாளராக எம்.எம்.எம். மிப்ராஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

பழைய மாணவிகள் சங்கத்தின் உப செயலாளராக பஹீமா மொஹிதீன், பொருளாளராக எஸ். ஏ. ரிஷ்மியா, உப பொருளாளராக ரீஸா லாபிர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் பழைய மாணவ மாணவிகள் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரபல்யமான மாணவர் சாதனை:

## கல்வி உலகிற்கு பெருமை சேர்த்த இளம் திறமை

(பீ.எம். முக்தார்)



பேருவளை சீனரன் கோட்டை பகுதியைச் சேர்ந்த மாணவன் முஹம்மத் இஹ்ஸான் ஹாசிம் ஹம்ஸா கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை 2025 ஆம் ஆண்டில் கணிதப் பிரிவில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வி உலகின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

இவர் இரசாயணவியல், பௌதீகவியல் மற்றும் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் A சித்திகளைப் பெற்று, மாவட்ட மட்டத்தில் 5ஆம் இடத்தையும், அகில இலங்கை மட்டத்தில் 56 ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

இச்சிறப்பான சாதனை அவரது உழைப்பும் உறுதியும் கல்வி மீது கொண்ட அர்ப்பணிப்பும் வெளிப்படுத்துகின்றது. மேலும், 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில், அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையைச் சேர்ந்த மாணவராக 9A என்ற சிறப்பான பெறுபேறுகளையும் இவர் பெற்றிருந்தார்.

இளம் வயதிலேயே தொடர்ச்சியான கல்வி சாதனைகளைப் பதிவு செய்து வரும் முஹம்மத் இஹ்ஸான் ஹாசிம் ஹம்ஸா, எதிர்காலத்தில் நாட்டிற்கு பெருமை சேர்க்கும் திறமையான புத்திஜீவியாக உருவெடுப்பார் என அனைவராலும் எதிர்பார்க்கப் படுகின்றது.

# பலாங்கொடை முஸ்லிம் பாடசாலை

## மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு நிகழ்வு





(பி.எம்.முக்தார்)

கல்வியே அடித்தளம் அறிவுடன் ஆயுதம் ஏந்திய குழந்தைகளுக்கு, நாளை இவ்வுலகை வெல்வதற்குத் தேவையான வழிகாட்டுதல் வழங்கப்பட வேண்டும். மேலும், பள்ளிப் பருவத்திலேயே கல்வியின் முக்கியத்துவம் அவர்களுக்கு விளக்கப்பட வேண்டும். மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமத்தில் வளரும் இந்தச் சிறுவர் சிறுமியர், நாளை கல்வியின் மூலம் இந்தக் கிராமத்தையும் அதன் பெயரையும் பிரகாசிக்கச் செய்வார்கள் என்பதே எங்கள் நம்பிக்கை. அந்த நம்பிக்கையை மனதில் கொண்டு, மே.மா.மது பலாங்கொடை முஸ்லிம் பாடசாலை மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி கல்லூரியின் பிரதான அரங்கில் நடைபெற்றது.

இந்தத் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியின் வளவாளராக, களுத்துறை மாவட்ட அஹதிய்யா பாடசாலை கூட்டமைப்பின் செயலாளரும், முன்னாள் இளைஞர் பாராளுமன்ற செனட் உறுப்பினரும், நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய வருமான அல்ஹாஜ் எஸ்.எம். ஹிஷாம் சுஹைல் கலந்து கொண்டார்.

பள்ளியின் 6 முதல் 11 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் இதில் பங்கேற்றனர். மேலும், பாடசாலையின் அதிபர் சுகேந்திர நாதன் மற்றும் ஆசிரியர்களும் இதற்கு ஆதரவளித்தனர்.

இந்நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்துவதற்கான ஒருங்கிணைப்பு மற்றும் நிதிப் பங்களிப்பை பலாங்கொடை ரஹ்மத் மகளிர் அமைப்பு ஏற்பாடு செய்தது.

எதிர்காலத்திலும் குழந்தைகள் மற்றும் பெற்றோருக்கான இது போன்ற திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# கிண்ணியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலக

## மீள்புனர் நிர்மாண வேலைகள் ஆரம்பம்



(எம்.ஏ. முகமட்)

கிண்ணியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலக மீள்புனர் நிர்மாண வேலைத்திட்ட நிகழ்வு (6) கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஏ.எச்.எம்.நியாத் தலைமையில் கிண்ணியா அபிவிருத்திக் குழு இணைப்பாளர் எம்.ஈ.எம். ராபிக்கினால் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வலுவலக திருத்த வேலைகளுக்கு PSDG வேலைத் திட்டத்தின் கீழ் 1.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கிண்ணியா அபிவிருத்திக் குழு இணைப்பாளர் எம்.ஈ.எம்.ராபிக், கிண்ணியா பிரதேச சபை உறுப்பினர் எம்.எல். அன்சாருல்லா, கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஏ.எச்.எம். நியாத், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.அபூ ஐயூப், பொது முகாமையாளர் ஆர்.எப். நியாஸ் மற்றும் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 APRIL 13 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# ஏகாதிபத்திய சியோனிதத்துக்கு எதிராக குரல் கொடுப்பது எமது தார்மீகக் கடமை!

இன்றைய உலக நிகழ்வுகளை பார்க்கின்ற போது உலகம் வேகமாக அழிவினை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பதை அவதானிக்க முடியும். ஆக்கத்திக்காகவும் அபிவிருத்திக்காகவும் பயன்படுத்த வேண்டிய அத்தனை வளங்களும் அழிவுக்கும் நாசகார நடவடிக்கைகளுக்குமே பயன்படுத்தப்படுகின்றமை வேதனைக்குரியது. தனது சொந்த நாட்டு மக்கள் பசியாலும் பட்டினியாலும் வேலை இல்லா திண்டாட்டத்தினாலும்

கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற போதிலும்,

அடுத்த நாட்டின் அபிவிருத்தியும் முன்னேற்றத்தையும் தடுப்பதற்காகவும் குறைப்பதற்காகவும் தனது வளங்களை பயன்படுத்தி வருகின்ற துர்ப்பாக்கி நிலையை கண்டு வருகிறோம் . பாதுகாப்பு செலவினங்கள் என்ற போர்வையில் பெருந்தொகையான பணத்தையும் வளத்தையும் இதற்காக ஒதுக்கி ஆக்கத்திற்காக பயன்படுத்த வேண்டியதை அழிவுக்காக பயன்படுத்தி வருகின்றதை காண்கின்றோம்.

ஏன் இந்த மூர்க்கத்தனம்..? இரத்த தாகம் ..?அழிவில் சுகம் காணும் யுகம் ஒன்றில் வாழ்வதும் ஒருவகையில் துர்பாக்கியமே..!!! ஏகாதிபத்திய மேலாதிக்க வாத சிந்தனையும் காலனித்துவ மோகமும் உலக அதிகார வர்க்கத்தின் கண்களை குருடாக்கி உள்ளன. போரும் கொலைகளும் இவர்களுக்கு ஏதோ குஷி தரும் விளையாட்டுகளாக மாறி உள்ளன .இன்று உலக அரங்கில் சர்வ சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பில்லை மனித உரிமைகள் என்ற பேச்சுக்கே இடமில்லை அமெரிக்காவும் இஸ்ரேலும் விதிக்கும் சட்டங்கள் தான் உலக சட்டங்களாக மாறி உள்ளன .இவர்களை தட்டிக் கேட்க யாருமில்லை. உலக அரசியல் அரங்கில் அதிகார சமநிலை இன்மை ,தேகாதிபத்திய சக்திகளுக்கு சாதகமாக மாறி உள்ளது.

இஸ்ரேல் தனது அகன்ற இஸ்ரேல் என்ற கனவினை நனவாக்க அமெரிக்காவை துரும்பாக பாவிக்கிறது .

அமெரிக்க அரசியல் அரங்கில் ஊடுருவி சதுரங்க ஆட்டத்தினை நிகழ்த்தி வருகிறது. தனது நலன்களை அடிப்படையாகக் கொண்டு அதற்கு சார்பாக முடிவெடுக்கும் நிழல் கரங்களை அதிகார மட்டங்களில் அமர்த்தி உள்ளது.

இந்த ஏகாதிபத்திய, சியோனிச சக்திகள் எவற்றை சரியானவை என சொல்கிறதோ அவற்றை ஏற்று தலையாட்டிகளாக இருப்பவர்கள் சமாதான விரும்பிளாகவும் உலக சமாதானத்துக்கு பங்களிப்பு செய்தவர்களாகவும் கருதப்படுகிறார்கள். இச்சக்திகளின் சதி நாசகார வேலைகளுக்கு எதிராக செயல்படுபவர்கள் பயங்கரவாதிகளாகவும் சமாதானவிரோதிகளாகவும் சித்தரிக்கப்படுகின்றார்கள்.

இத்தகையோட பின்னணியிலே அரபு இஸ்லாமிய நாடுகள் இந்த சக்திகளின் இறும்பு பிடிக்குள் சிக்குண்டுள்ளன.

அதன் காரணமாக இந்த நாடுகளுக்கு சுவாதீனமான முறையிலே முடிவெடுக்கவோ தனித்துவமான முறையிலே செயல்படவோ முடியாதுள்ளது.

ஒரு நாட்டுக்கு எதிராக இன்னொரு நாட்டை பகைத்து வைத்து, ஒன்றை வைத்து இன்னொன்றை பிரித்தாளும் (னுைனைந ரூ சுரடந ) நடவடிக்கை மூலமாக இந்த பிராந்தியத்தை இந்த தீய சக்திகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. அரபு, இஸ்லாமிய நாடுகள் அத்தனை வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளன. மனித வளம் , புவியியல் ரீதியில் ஒரே நிலம், ஒரே மொழி , ஒரே இனம், ஒரே மதம் இவை பெரும் பலமாகும். அதற்கு மேலாக முழு உலகினதும் இயக்கத்தை தீர்மானிக்கக்கூடிய சக்தி வளங்களையும் இந்த நாடுகள் கொண்டுள்ளன.

எனினும் இவை அனைத்தும் ஒற்றுமையின்மையும் பிரித்தாளும் கொள்கைளுக்குள் இலகுவாக சிக்கிக் கொள்ளும் தன்மை காரணமாகவும் இந்த அத்தனை வளங்களும் இருந்த போதும் இந்த நாடுகள் பலவீனமானதாக உள்ளன.

ஏகாதிபத்தியத்துக்கு துணை போகக்கூடிய ஆட்சியாளர்களை ஆட்சியில் அமர்த்தி தமக்குத் தேவையான காய் நகர்த்தர்களையும் அபிலாசைகளையும் அமெரிக்கா செய்து வருகிறது.

சுமார் ஏழு தசாப்தகளுக்கு மேலாக இந்த உலகில் இந்த சக்திகள் மேற்கொண்டு வருகின்ற நாசகார வேலைகள் பற்றி இப்போது மக்கள் படிப்படியாக உணர்ந்து வருகின்றனர். பலஸ்தீன விவகாரம் முன்னர் முஸ்லிம்களுக்குரிய அல்லது அரபு நாடுகளுக்குரிய ஒரு விவகாரமான நோக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது இப்பிரச்சினை சர்வதேச மயமாகியுள்ளது. தமக்கு சார்பான ஊடாகங்கள் மூலமாக கட்டப்பட்டு வந்த போலி பிம்பங்கள் இப்போது படிப்படியாக மறைந்து வருகின்றன.

இந்த சியோனிச சக்திகளின் உண்மையான முகம் உலகுக்கு அம்பலமாகி வருகிறது.

இப்போது முஸ்லிம்கள் அல்லாத நடுநிலையாக சிந்திக்கக்கூடிய நீதியை நியாயத்தையும் மனித உரிமையும் மதிக்கக்கூடிய சக்திகள், அமைப்புக்கள் மற்றும் நாடுகள் இப்போது அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும்இஸ்ரேலின் சியோனிசதையும் உலகின் ஒரு புற்றுநோயாக அடையாளப்படுத்தி வருகின்றன.

இது ஒரு மாபெரும் வெற்றியாகும் மாபெரும் திருப்புமுறையாகும். இந்த உலகில் இந்த சக்திகளுக்கு எதிராக குரல் கொடுப்பது தார்மீக கடமையாகும்.

இன்று சர்வதேச அரங்கில் இந்த சக்திகளால் அரங்கேற்றப்படுகின்ற அநீதிகளை ஆதரிப்பதோ அல்லது அதற்கு மௌன அங்கீகாரத்தை வழங்குவதோ எமது தார்மீக மற்றும் விழுமிய வங்குரோத்து நிலையை பிரதிபலிக்கும்.








எம்.எஸ். அமீர் ஹுசைன்

# அச்சுறுத்தும் அமெரிக்கா:



# விடாப் பிடியில் ஈரான்

# நெருக்கடியில் அமைதிப் பேச்சு

ஈரான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையிலான யுத்தம் இரண்டு வாரங்களுக்கு தற்காலிகமாக நிறுத்தப்படுகின்றது என்ற தகவல் 2026.04.08 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ரம்ப் ஈரானுக்கு 48 மணித்தியாள அவகாசம் வழங்கி இருந்த நிலையில் அவகாசம் முடிவடைய சில மணித்தியாளங்கள் இருக்கையில் புதிய அறிவித்தல் வெளியாகி இருக்கின்றது. இந்த இரண்டு வார போர் நிறுத்தத்தை கொண்டு வருவதற்காக பாகிஸ்தானும் சீனாவும் பின்னணியில் இருந்து முயற்சி எடுத்ததாக சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன. இந்த போர் நிறுத்தத்திற்கான உடன்படிக்கையை பாகிஸ்தான் சாசனம் என்று அழைக்கப் படுகின்றது. ஆனாலும் தற்காலிக போர் நிறுத்தத்திற்கு ஈரான் முன்வைத்துள்ள 10 அம்ச நிபந்தனைகளை அமெரிக்கா ஏற்றுக்கொண்ட அடிப்படையில் தொடர்ந்து நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றிற்காக பேச்சுவார்த்தை நடத்தப்படலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் மலர்ந்துள்ளன.

அத்துடன் கடந்த 40 நாட்களாக தொடர்ந்து கொண்டிருந்த ஈரான் மீதான தாக்குதல் நிறுத்தப்பட்டதோடு ஈரான் கப்பல் போக்குவரத்திற்காக மூடி இருந்த ஹோர்மூஸ் கால்வாயை திறந்து விட்டதாகவும் சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதுவானாலும் மத்திய கிழக்கு வளைகுடா பிரதேசத்தில் கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதியில் இருந்து 2026.04.08 ஆம் திகதி வரையில் சூழ்ந்துகொண்டிருந்த கொடிய போர் மேகங்கள் கலைந்து சென்று நிரந்தர அமைதிக்கான வழி பிறக்குமா என்பது உலக நாடுகளது எதிர்பார்ப்பாகும். கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த தீ அனைந்து மக்கள் நிம்மதியாக அன்றாட அலுவல்களை மேற்கொள்ளும் நிலை உருவாக வேண்டும். ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து 40 நாட்களாக தொடர்ந்து நடத்தி வந்த யுத்தம் காரணமாக ஈரான் மத்திய கிழக்கில் இருந்து ஏனைய நாடுகளுக்கு எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல் மார்க்க போக்கு வரத்தை தடை செய்ததால் உலகில் உள்ள பல நாடுகளின் பொருளா தாரத்திற்கு பலமான அடி விழ ஆரம்பித்தது.

எரிபொருள், எரிவாயு விநியோகம் தடைபட்டதால் அவற்றின் விலைகளில் திடீர் அதிகரிப்பு, தட்டுப்பாடு ஏற்பட்டதால் உலகில் மக்கள் அமெரிக்காவுக்கு எதிராக கொதித்தெழுந்தனர். யுத்தத்திற்கு எதிராக குரல் எழுப்ப ஆரம்பித்தனர்.

2026.04.06 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ரம்ப் புதிய அறிவித்தல் ஒன்றை போட்டார். 48 மணித்தியாலங்களுக்குள் ஈரான் அடிபணிந்து ஹோர்மூஸ் கால்வாயை திறக்காவிட்டால் ஈரானின் நாகரீகம் அழிக்கப்படும். ஈரான் மீண்டும் கட்காலத்தை நோக்கி தள்ளப்படும். ஈரானில் பாலங்கள், எண்ணெய் வயல்கள், எரிவாயு எரிசக்தி நிலையங்கள் அனைத்தும் ஏவுகனைத் தாக்குதல்கள் மூலம் பூண்டோடு அழிக்கப்பட்டு விடும் என்று அறிவித்திருந்தார். இந்த அறிவித்தல் காரணமாக ஒவ்வொரு நொடியும் உலக நாடுகளுக்கு மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியதாக கடிகார முல் 48 மணித்தியாளத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. இதற்கிடையில் ஏற்கனவே ரம்ப் இவ்வாறான இரண்டு அறிவித்தல்கள் போட்டு அவையும் காலம் கடந்து விட்ட நிலையில் அமெரிக்காவின் எந்தவிதமான நிபந்தனைகளுக்கும் ஈரான் அடிபணியவில்லை.

இவ்வாறான ஒரு நிலையில் பாகிஸ்தானின் மத்தியஸ்தத்தில் புதிய சமாதான உடன் படிக்கை ஒன்றுக்கான காய்கள் நகர்த்தப் பட்டன. இதில் பாகிஸ்தான் பிரதமர் ஷபா ஷரீப் மற்றும் அந்நாட்டின் இராணுவ தளபதி ஆஸிம் முனீர் ஆகியோரின் முயற்சியாக தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றிற்கு போரில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பினரையும் கொண்டு வர முடிந்தமை உலகமே வியப்பில் மூழ்கிய ஒரு விடயமாக மாறின. இதில் டொனால்ட் ரம் அவரது எக்ஸ் தளத்தில் போர் நிறுத்தம் பற்றிய பதிவுகளை இட்டிருந்தார் என்பது சர்வதேச ஊடகங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. அதேபோன்று ஈரான் தரப்பில் இருந்தும் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் ஆராச்சியும் அதனை உறுதி செய்திருந்தார். இது ஒரு தற்காலிக போர் நிறுத்தமாகும். அதே நேரம் ஈரான் முன்வைத்துள்ள 10 அம்ச நிபந்தனைகளை அமெரிக்காவும் இஸ்ரேலும் ஏற்றுக் கொண்டால் தொடர்ச்சியான போர் நிறுத்தம் ஏற்படலாம் என்ற அறிவிப்பை செய்திருக்கின்றது. அந்த 10 அம்ச நிபந்தனைகள் வருமாறு : -



ஈரான் மீதான அத்துமீறிய தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும், அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது நடத்திய ஏவுகனைத் தாக்குதல்களால் ஈரானில் ஏற்பட்ட சேதங்களுக்கு நஷ்டஈடுகள் வழங்கப்பட வேண்டும், மேற்காசியா வில் இருந்து அமெரிக்கப் படைகள் முழுமையாக வெளியேற வேண்டும், ஈரான் மீதான பொருளாதார தடைகள் நீக்கப்பட வேண்டும், ஹோர்மூஸ் கால்வாய் தொடர்ந்தும் ஈரானின் கட்டுப்பாட்டிலே இருக்கும். அவ்வழியாக கப்பல்கள் போவதாக இருந்தால் ஈரானின் அனுமதி பெற்றே போக வேண்டும், லெபனான், பாலஸ்தீன பிரதேசங் களில் இருக்கின்ற ஹிஸ்புல்லாஹ், ஹூதி மற்றும் ஹமாஸ் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும், ஈரானின் யுரேனியம் செரிவூட்டலை அமெரிக்காவும் இஸ்ரேலும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற விடயங்கள் உட்பட 10 அம்சங்கள் ஈரானின் நிபந்தனைகளில் உள்ளடங்குகின்றன.

எவ்வாறோ ஈரானின் இந்த நிபந்தனைகளை தொடர்ந்து பேசி ஒரு முடிவுக்கு வரலாம் என்று ட்ரம்ப் நினைக்கின்றார் போலும். அதே நேரம் வழிந்து மாட்டிக்கொண்ட இந்த யுத்தத்தில் இருந்து எவ்வாறு வெளியே வருவது என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி ரம்பிற்கு இந்த பாகிஸ்தானின் மத்தியஸ்தத்திலான சமாதான திட்டம் ஒரு பிடியாக மாறிவிட்டது என்றே கூறலாம். ஏற்கனவே மத்திய கிழக்கின் சில நாடுகள் நிறைவேற்றிய ஹோர்மூஸ் கால்வாயை திறக்க வேண்டும் என்ற பிரேரணையை சோவியத் ருஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் ஐ.நா. பாதுகாப்பு சபையில் வீட்டோ ரத்து அதிகாரத்தை பயன்படுத்தி எதிர்த்து ஈரானின் நிலையை பலப்படுத்தி விட்டன. இதுவும் அமெரிக்காவுக்கும் அமெரிக்காவின் நேச நாடுகளான மத்திய கிழக்கு நாடுகளுக்கும் பலமான ஒரு அடியாக அமைந்தது.

இந்நிலையில் அமெரிக்கா ஈரானின் அணு ஆயுத செரிவூட்டல் திட்டத்தை அழித்துவிட்டோம், ஏவுகனை தளங்களை அழித்துவிட்டோம், எரிசக்தி மற்றும் எரிவாயு தளங்களை அழித்துவிட்டோம், ஈரானில் ஆட்சியை கவிழ்த்து ரெஜீம் சேன்ஜ் ஏற்படுத்தினோம், யுத்தத்தை ஆரம்பித்த இலட்சியத்தை அடைந்து விட்டோம் என்று ரம்ப் மார்தட்டினாலும் ஈரானில் அப்படியாக எதையும் அமெரிக்கா வால் சாதிக்க முடியவில்லை. ஆனாலும் தாக்குதல் காரணமாக ஈரானுக்கும் பாரிய சேதங்கள் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. சுமார் 10.000 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கிலா னோர் காயமடைந்துள்ளனர். அத்துடன் 08 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தாக்குதல் அச்சம் காரணமாக இருப்பிடங் களை விட்டு வெளியேறி உள்ளனர். அப்படி வேதனைகள் இருந்தும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் 2026.04.07 ஆம் திகதி விடுத்த அறிவித்தல் காரணமாக மக்கள் ஆயிரக்கணக்கில் குவிந்து சென்று ஈரானில் பாலங்கள், அணுசக்தி மற்றும் எரிசக்தி வலு நிலையங்களை பாதுகாப்போம் என்று அணிதிரண்டு மனித சங்கிலிகளாக கூடிய காட்சிகளையும் அவதானிக்க முடிந்தது.

எவ்வாறாயினும் உலக வரைபடத்தில் இருந்து ஈரானை அழிப்போம் என்று கூறிய ட்ரம்ப் இரண்டு வாரகால தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்ததன் மூலம் ஈரானை அமெரிக்காவால் அடிபணியச் செய்ய முடியவில்லை என்பதை உலக மக்கள் கண்டுகொண்டு விட்டனர். ஆனாலும் ஈரானின் கார்க் தீவை தரைமார் க்கமாக படைகளை அனுப்பி கைப்பற்றுவது என்ற திட்டம் மூலம் ஈரானின் எண்ணெய் வளத்தை கைப்பற்றி சுரண்டுவதே அமெரிக்காவின் பிரதான திட்டமாக அமைந்திருந்தது. ஆனாலும் அந்த இலட்சியத்தை அடைய அமெரிக்க ஜனாதிபதி வகுத்துள்ள திட்டம் எந்தளவிற்கு சாத்தியப்படும் என்பதை திட்டவட்டமாக சொல்ல முடியாது. 18000 அமெரிக்க துருப்பினரைக் கொண்டு நடத்தவுள்ள தரைமார்க்க ஆக்கிரமிப்பை எதிர்க்க ஈரான் 350.000 படையினரை கண ரக ஆயுதங்களுடன் தயார் நிலையில் வைத்திருக்கின்றது என்று அறிவித்திருக் கின்றது. அவ்வாறு அமெரிக்க படைகள் கார்க் தீவுக்குள் நுழைவார்களானால் வளைகுடா பிரதேச கடலில் இருக்கின்ற திமிங்கிளங்களுக்கு அமெரிக்க படையினர் நல்ல இரைதான் என்றும் ஈரான் அறிவித்திருந்தது.

எதுவானாலும் மத்திய கிழக்கில் போர் சூழல் நீடித்தால் அதனால் உலகில் உள்ள அதிகமான நாடுகளுக்கு பெரும் பாதிப்பும் நஷ்டங்களும் ஏற்பட்டு பொருளாதார சரிவும் நலிவும் ஏற்படுவதை தடுக்க முடியாது. அதனால் இந்த யுத்தத் நிறுத்தப்பட வேண்டும். உலக அரங்கில் உலக பொலீஸ்காரன் என்ற நினைப்பில் அமெரிக் காவும் இஸ்ரேலும் ஆடும் ஆட்டங்களை தடுத்து நிறுத்த வேண்டும். இஸ்லாமிய நாடுகளின் இறைமை, தன்னாதிக்கம் மதிக்கப்பட வேண்டும். இஸ்ரேலினதும் அமெரிக்காவினதும் அத்துமீறல்கள், ஆக்கிரமிப்புக்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். ஆனாலும் இந்த தற்காலிக போர் நிறுத்தத்தை பாதுகாக்க இஸ்ரேல் ஒத்துழைக்குமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். இவ்வாறான தாக்குதல் நிறுத்தம், யுத்த நிறுத்தம் என்று அமைதி சூழ்நிலையில் இஸ்ரேல் சடுதியாக தாக்குதல்களை நடத்தினால் நிலைமை தலைகீழாக மாறும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்நிலையில் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் 2026.04.11 ஆம் திகதி பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் செரீனா ஹோட்டலில் ஜின்னா மண்டபத்தில் ஆரம்பமாகியது. இந்த கட்டுரை எழுதப்படு கின்ற நேரத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றவண்ணம் இருந்தன. ஆனால் முடிவுகள் எட்டப்பட்டிருக்கவில்லை.

இருந்தாலும் ஈரானின் சில நிபந்தனைகளை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளும் அறிகுறிகள் தென்பட்டன. குறிப்பாக 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து வளைகுடா நாடுகளில் இருந்த 600 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள சொத்துக்களை அமெரிக்கா முடக்கி வைத்திருக்கின்றன. அந்த சொத்துக்களை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக் யையை ஈரான நிபந்தனையாக வைத்திருந்தது.

இந்த நிபந்தனைகளை அமெரிக்காவும் நிபந்தனையுடன் ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு இருந்தது. ஈரான் பிடித்து வைத்துள்ள அமெரிக்க பணயக்கைதிகளை விடுவிக்க வேண்டும். ஹோர்மூஸ் கால்வாயை ஈரான் திறக்க வேண்டும். கப்பல்கள் போக எந்தவிதமான நிபந்தனை களையும் விதிக்கக்கூடாது என்பது அமெரிக்காவின் நிபந்தனையாகும்.

இவ்வாறாக ஈரான் குழுவின்ர் பாகிஸ்தான் வந்த போது அமெரிக்காவின் தாக்குதலால் கொல்லப்பட்ட மினாப் என்ற ஊரில் இருந்த ஆரம்ப பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த 168 குழந்தைகளின் நினைவாக விமானத்திற்கு ‘மினாப் 168’ என்ற பெயரை வைத்து கொல்லப்பட்ட குழந்தைகளது புத்தகப் பைகளையும் புகைப்படங்களையும் விமானத்தின் ஆசனங்களில் வைத்து கொல்லப்பட்ட குழந்தைகளுக்கு நியாயம் தேடும் நிலையிலும் இஸ்லாமாபாத் வந்துள்ளனர்.

ஈரானின் நாடாளுமன்ற சபாநாயகர் முஹம்மட் பகர் கலீபா, வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் ஆராச்சி உள்ளிட்ட குழுவினர் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வந்தனர். அமெரிக்கா தரப்பில் இருந்து அமெரிக்க ஜனாதிபதியின் சகோதரர் ஜெராட் குஷ்னர், உப ஜனாதிபதி ஜெ.வி. வென்ஸ் மற்றும் ஸ்டிவ் வென்கொப் உள்ளிடவர்கள் அடங்கிய குழுவினர் வந்து சேர்ந்தனர். எவ்வாறோ உலக நாடுகள் பலவற்றின் எதிர்கார்ப்பாக அமைந்தது இந்த பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்க வேண்டும். வளைகுடா போர் முடிவுக்கு வரவேண்டும். உலக நாடுகள் சந்தித்து வருகின்ற பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு ஏற்பட வேண்டும் என்பதாகும்.

ஆனாலும் அமெரிக்கா ஈரானின் நிபந்தனை களை ஏற்பது தொடர்பாக எதிர்முரணாக விடாப்பிடியா நின்றால் எதிர்பார்ப்பு சுக்குநூ ராகிவிடும். மீண்டும் போர்தான்.

# பாடசாலை மட்ட பொது பரீட்சைகளில் சிறந்து விளங்கிய கடற்படை வீரர்களின் பிள்ளைகளுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கும் நிகழ்வு



**(எம்.எச்.எம். சியாஜ்)**

2024 ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர் தரம், 2025 ஆம் ஆண்டு ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைகளில் சிறப்புத் தகுதியுடன் தேர்ச்சி பெற்ற கடற்படையில் பணிபுரியும், மாற்றுத்திறனாளின், ஓய்வு பெற்ற கடற்படை வீரர்களின் பிள்ளைகள் ஐந்நூற்று ஐம்பத்திரண்டு மாணவர்களுக்கு கடற்படை நலநிதியின் பங்களிப்புடன் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டது. கடற்படைத் தளபதி, வைஸ் அட்மிரல் கான்சன பானகொடாவின் தலைமையில், பதின்மூன்று கல்வி உதவித்தொகை பெறுபவர்களுக்கு கல்வி உதவித் தொகை பணப் பரிமாற்றச் சீட்டுகள் அடையாளப்பூர்வமாக வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை (06) கடற்படைத் தலைமையகத்தில் நடைபெற்றது.

இத் திட்டத்தின் கீழ், 2024 ஆம் ஆண்டில் உயர்தர பரீட்சையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான நாற்பத்திரண்டு மாணவர்களுக்கும், அதே ஆண்டில் சாதாரண தர பரீட்சையில் ஒன்பது 09 A' சித்திகளைப் பெற்ற ஐம்பத்து மூன்று மாணவர்களுக்கும் மற்றும் 2025 ஆம் ஆண்டில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்புத் தகுதியுடன் தேர்ச்சி பெற்ற நானூற்று ஐம்பத்தி ஏழு மாணவர்களுக்கும் இதன்போது புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# “பிடவல ஸாவியாவில் ஹிஸ்புல் குர்ஆன் போட்டியின் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு





**(பீ. எம். முக்தார்)**

பேருவளை சீனன் கோட்டை பிடவலை அல் மிர்அதுஷ் ஷாதுலிய்யா ஸாவியாவில் புனித ரமழான் மாதம் இரவு நேரத்தில் 30 நாட்கள் நடைபெற்ற ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸில் பங்குபற்றிய சிறார்களுக்கு பணப் பரிசில் வழங்கும் வைபவம் பிடவல ஸாவியாவில் நடைபெற்றது. சீனன் கோட்டைப் பள்ளிச்சங்கத் தலைவரும் ஜாமியா நளீமியா கலாபீட உப தலைவருமான ஏ.எச்.எம். முக்தார் மற்றும் ஸாவியாவின் உபகுழுவின் வழிகாட்டலின் கீழ் ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸ் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பிரதேசத்தைச் சேர்ந்த 29 மாணவர்கள் இம் மஜ்லிஸில் பங்குபற்றினர். ஸாவியாவில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் சீனன் கோட்டைப் பள்ளிச்சங்க இணைச் செயலாளர்களான அல் ஹாஜ் எம்.எம்.எம் ஷிஹாப், கலீபதுச் சாதுலி அஸ்செய்க் இஹ்ஸ ானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி), அல்ஹாஜ் ரம்லான் அரூஸ், உப தலைவர் அல்ஹாஜ் எம். ஸப்வான் நயீம், உறுப்பினர் அல் ஹாஜ் இஸ்ஸத் ஸவாஹிர் உட்பட பல பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# அறிவிப்பாளர் இர்பானின் பொன்மாலைப் பொழுது நிகழ்வு





**(ஏ.எஸ்.எம். ஜாவித்)**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் அறிவிப்பாளரும் பிரபல இலங்கை பாடகருமான மொஹமட் இர்பானின் மாதாந்த பொன் மாலைப் பொழுது இசை நிகழ்வு மேஸ்ட்ரோ இசைக் குழுவினரின் இசைய மைப்பில் ( 05 ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆனந்த சமரக்கோன் கலையகத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

பல புதிய பாடல், பழைய மற்றும் இடைக்கால பாடல்களை இளம் புதிய பாடகர்களுடன் மொஹமட் இர்பான் பாடி மகிழ்வித்தார். இதன்போது நலன் விரும்பிகள் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் களான ஏ.எஸ்.எம்.ஜாவித் மற்றும் ஜபீர் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

# கல்முனை மஹ்மூத் பாலிகா மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக ஏ.முஹம்மட் நௌஷாட் தெரிவு



கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரியான இவர், மாவனல்ல ஸாஹிறா தேசிய பாடசாலையின் அதிபராக நீண்டகாலம் சேவையாற்றி அப்பகுதி மக்களின் செல்வாக்கையும் பெற்றுக் கொண்டார்.

தற்போது கிண்ணியா வலய கல்வி அலுவலகத்தில் பிரதி கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிக் கொண்டு சிறப்பான கல்விச் சேவையாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் கல்முனை மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# டித்வா புயலால் சேதமடைந்த வீடுகளுக்கான முதல் கட்ட கொடுப்பனவு புத்தளத்தில் வழங்கி வைப்பு






**(எம்.எச்.எம்.சியாஜ்)**

டித்வா புயலால் புத்தளம் பிரதேச செயலகத்தில் முழுமையாக மற்றும் பகுதி அளவில் சேதமடைந்த 44 வீடுகளுக்கான முதல் கட்ட காசோலைகளை வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை (09) புத்தளம் பிரதேச செயலாகத் தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகார அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன, புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம் ஜே எம் பைசல் , புத்தளம் மாநகர சபை மேயர் ரின்சாத் அஹமட், புத்தளம் மாவட்ட அதிபர் சில்வா, புத்தளம் பிரதேச செயலாளர் புத்தளம் மாநகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள்,அரச உத்தியோகத்தர் கள் மற்றும் டித்வா புயலால் புத்தளம் பிரதேச செயலகத்தில் முழுமையான மற்றும் பகுதி அளவில் சேதமடைந்த வீடுகளின் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.



Mark Twain
(1835-1910, அமெரிக்க எழுத்தாளர், விரிவுரையாளர்).

# ஈரானை விளங்கிக் கொள்ளல்!

4000 வருட வரலாறு கொண்ட ஈரானின் பண்பாடு குறித்து 250 வருட பண்பாடு கொண்ட அமெரிக்காவும், வெறும் 77 வருட பண்பாடு கொண்ட இஸ்ரேலும் எமக்கு அமைத்துத் தருகிற பிம்பத்தை மேற்குலக ஊடகங்கள் செரித்து வீங்கிப்போயிருக்கின்றன. ஈரான் ஒரு மதஅடிப்படைவாத நாடு எனவும் சர்வாதிகார நாடு எனவும் நாகரிகத்தில் பின்தங்கிய நாடு எனவும் மேற்குலக ஊடகங்களால் கடந்த 47 வருடமாக வரையப்படுகிற சித்தரிப்புகளை மென்று விழுங்கி நம்மில் பலர் அவதிப்படுகிறோம். அதனடிப்படையில் ஈரானை புறநிலையில் நின்று புரிந்துகொள்கிறோம். விமர்சனங்களையும் அதனடிப்படையில் வைக்கிறோம். மையநீரோட்ட ஊடகங்களுக்கு வெளியே போய் மாற்று சிந்தனைமுறையை வளர்க்க நாம் முயலாதவரை எமது அறிவு உண்மையை கண்டுபிடித்துத் தராது.

"விவேகம் இல்லாத அறிவு எங்கள் சிந்தனையை வளர்க்காது" என்கிறார் சுவிஸ் (Laussane) பல்கலைக்க கழக பேராசிரியர் Patrick Ringgenberg . இவர் ஈரானில் சிலகாலம் தங்கி ஆராய்ச்சியில் ஈடுபட்டவருமாவார். 2025 யூனில் அமெரிக்கா ஈரானைத் தாக்கிய காலத்திலும் அங்கு இருந்திருக்கிறார். அவரது கருத்துகளில் சில பகுதிகளை இங்கு தருகிறேன்.

இஸ்லாமியக் குடியரசு என்பது ஒரு சிக்கலான கலவை கொண்ட கட்டமைப்பு ஆகும். அது ஒரேநேரத்தில் மேற்கத்தைய வகைமாதரியான தேசிய அரசு ஜனநாயக அமைப்பும், 1906ம் ஆண்டின் அரசமைப்புப் புரட்சியின் வாரிசான குடியரசு அமைப்பும், ஆயிரக்கணக்கான ஆண்டு பழமையான அரசாட்சி பாரம்பரியத்தில் வேர்களைக் கொண்ட ஒரு பேரரசு அதிகாரமும், மற்றும் புராதன வேர்களைக் கொண்ட மதவழிகாட்டல் (imamocracy rather than theocracy) கொண்ட அமைப்பும் என சேர்ந்த கலவையான ஆட்சிமுறையை ஈரான் கொண்டுள்ளது என்கிறார். வளர்ச்சி என்பது இதையெல்லாம் துடைத்தழித்து மேற்குலகு வகுத்துத் தரும் சட்டகத்துள் ஒடுங்கி நிகழ்வதல்ல. அந்தச் சட்டகத்துள் மற்றமைகளை அடக்க முனைவது காலனிய மனப்பான்மை கொண்ட சிந்தனை முறை ஆகும் என்பதை இந்த இடத்தில் கருத்தில் கொள்ளலாம்.

1979ம் ஆண்டு இஸ்லாமியப் புரட்சி என்பது பழமையான அரசியல் நடைமுறையை நவீன அரசியல் அமைப்பில் சட்டபூர்வமானதாக அமைத்தது எனலாம். இஸ்லாமியக் குடியரசை வெறும் முல்லாக்களின் ஆட்சி என்பது தவறானதாகும். மத




## அமெரிக்கா புவியியலை கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே கடவுள் போரை தோற்றுவித்தார்

தலைவர்கள் பல நிலைகளில் இருந்தாலும், முக்கிய கொள்கைகள் பெரும்பாலும் புராதனப் பேரரசுப் பாரம்பரியத்திலிருந்து தோன்றுகின்றன என்கிறார் . 6ம் நூற்றாண்டு Achaemenid பேரரசு தொடக்கம், மத்திம காலத்தில் பிராந்திய வல்லரசாக இருந்தது வரையான மேலாதிக்க அரசியல், சட்ட அமைப்பு மற்றும் நிர்வாக கட்டமைப்பு என்பவற்றின் அடிப்படையில் நூற்றாண்டு காலமாக தனது அரசியல் அமைப்பு வடிவ வளர்ச்சியை கட்டமைத்த வரலாறு ஈரானுக்கு உண்டு.

7ம் நூற்றாண்டில் இஸ்லாமின் வருகைக்குப் பின்னரும் அபாசிட் கலிபாக்கள் மற்றும் துருக்கிய சுல்தான்களுடன் சேர்ந்து இராசதானிகளை அல்லது பேரரசுகளை நிர்வகித்தவர்கள் ஈரானிய மந்திரிகள். அதன் விளைவு புரட்சிக்குப் பின்னரான அரசு பகுதியளவு இஸ்லாமியப்படுத்தப் பட்டதாக இருந்தது. ஆனால் உண்மையில் அது முன் நவீனத்துவ அல்லது இஸ்லாமுக்கு முன்னான அரசமைப்பு வடிவமும், அதனடிப்படையிலான மூலோபாய அணுகுமுறையும், அடையாளமுமாக இருந்தது.

பல அம்சங்களில் இஸ்லாமியக் குடியரசின் கொள்கைகளானது இஸ்ரேலை விடவும் குறைந்தளவில்தான் அரச வடிவத்துள் மத செல்வாக்குச் செலுத்துகிறது. கடும்போக்கு யூதர்கள் தமது ஆக்கிரமிப்பு நோக்கத்தை வரலாற்று மாயையையும் மெஸாயானிச (மீட்பரிஸம்) நம்பிக்கையையும் வைத்து நிகழ்த்துகிறார்கள். இஸ்ரேலிய அரசு வடிவத்துள் அது மிகுந்த செல்வாக்கு செலுத்துகிறது. அதேபோல் அமெரிக்காவில் அவர்களது தற்போதைய இஸ்ரேல் சார்புக் கொள்கையானது சியோனிச மெஸாயிசத்தின் ஊடுருவலால் வலுப்பெற்ற ஒன்றாகும் என விளக்குகிறார்.

மத அடிப்படைவாத அரசு என மேற்குலகால் சுட்டப்படும் ஈரானில் கிறிஸ்தவர்கள், யூதர்கள், இந்துக்கள் என எல்லோருக்குமான மதவழிபாட்டு இடங்கள் இருப்பதையும், மத சுதந்திரம் எந்தவித ஒடுக்குமுறையும் இல்லாமல் இருப்பதாகவும் அவர் ஒரு பேட்டியில் குறிப்பிடுகிறார்.

ஈரான் சமூகம் ஒரு படித்தானதல்ல. வெவ்வேறு சமூக இனக் குழுக்களை கொண்ட கலவை எனவும் குறிப்பிடும் அவர், தற்போதை ஈரான் 3 அடையாளங்களைக் கொண்டது என்கிறார்

1. அந்த மண்ணின் பூர்வகுடிகள்
2. 7ம் நூற்றாண்டிலிருந்து வந்த முஸ்லிம்கள் மற்றும் 16ம் நூற்றாண்டு சியா முஸ்லிம் பிரிவினர்.
3. ஐரோப்பியர்களின் தலையீட்டின் போதான 19ம் நூற்றாண்டு மேற்கத்தையர் அரைவாசி மக்கள் பேர்சியர்கள்.

மிகுதி அரைவாசி பல்லின அடையாளம் கொண்டவையான துருக்கி மொழி பேசுபவர்கள், அராபியர்கள், குர்துகள், ஆர்மேனியர்கள், பலூச்சிஸ் ஆகியோர் ஆகும்.

அத்தோடு ஈரானுக்கு ஈரானிய, முஸ்லிம், மேற்கத்தைய கலண்டர்கள் மூன்று இருப்பதாகக் குறிப்பிடுகிறார். தினசரி வாழ்க்கையில் ஈரானிய மரபு, முஸ்லிம் பெறுமதி, மேற்கத்தையம் மூன்றும் கலந்துள்ளது என்கிறார்.

அதனால் ஈரான் பன்முகத்தன்மையான அடையாளம், மொழிப் பண்பாடு, மதப் பண்பாடு, வாழ்நிலை என்பன கொண்டதாக இருக்கிறது. இதையெல்லாம் விளக்காமல் மேற்குலக மையநீரோட்ட ஊடகங்கள் ஈரான் குறித்த மோசமான, இருளான பிம்பங்களை உருவாக்கி நமக்குத் தருகின்றன. அங்குள்ள யதார்த்த நிலைமைக்கும் மேற்கத்தைய ஊடகங்கள் சொல்லித் தருகிற பிம்பத்துக்கும் மிகப் பெரிய இடைவெளி இருப்பதை தான் நேரிலேயே கண்டு கொண்டதாக கூறுகிறார். ஈரான் தோற்கடிக்கப்பட முடியாத தேசம் என்கிறார்.

பெரும்பாலும் ஈரான் குறித்த மேற்கத்தையப் பார்வையானது மூன்று வகையான முற்கற்பிதங்களால் உருவானது.

1. ஓரியண்டலிசம்
எட்வேர்ட் சைத் விவரிக்கிறபடி, அவர்களின் அந்த கற்பிதம் ஈரானுக்கும் பொருந்திப் போகின்றது. இவை கீழைத்தேய மக்களை பகுத்தறிவற்றவர்கள், வஞ்சகமானவர்கள், கொடூரமானவர்கள், அடிதடிக்காரர்கள் அல்லது போர்வெறி பிடித்தவர்கள், சோம்பேறிகள், வரலாற்றுக்கு வெளியே நிற்பவர்கள் என்ற அவமதிப்பு கருத்தியல்கள் கொண்டவை.

2. இஸ்லாமோபோபியா
இதன் வேர்கள் மத்திம காலத்தில் முளைக்கத் தொடங்கியது. இது இஸ்லாம் ஆனது மத ரீதியான, கலாச்சார ரீதியான, இராணுவ ரீதியான அச்சுறுத்தல் கொண்டது எனவும், உலகை தன்வசப்படுத்தி கிறிஸ்தவர்களை முஸ்லிம்களாக மாற்றும் நோக்கம் கொண்டது எனவும் அச்சுறுத்தும் கருத்தியல்களைக் கொண்டது.

3. ஈரானோபோபியா
1979 இஸ்லாமியப் புரட்சிக்கு பின்னர் உருவான கருத்தியல் இது. இஸ்ரேலிய லொபிகளாலும், அமெரிக்க அரசியல் வாதிகளாலும் உருவாக்கப்பட்ட கருத்தியல். இந்த கருத்தியலை உயிர்ப்பித்து வைத்திருக்க 1979 நவம்பர் 4 இலிலிருந்து 1981 ஜனவரி 20 வரையான ஈரானிய மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட அமெரிக்க பயணக்கைதிகள் விவகாரத்தின் தழும்பை இதுவரை ஆறவிடாமல் பார்த்துக் கொள்கின்றனர், அமெரிக்க அரசியல்வாதிகள்.

இந்த மூன்று அம்சங்களோடு, நவகாலனிய அல்லது நவ ஏகாதிபத்திய பார்வையும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இது 20ம் நூற்றாண்டின் காலனித்துவத்திலிருந்து விடுதலை பெற்ற போராட்ட வரலாறுகளைப் புறக்கணித்து, உலக ஒழுங்கில் மேற்குலக நாடுகள் அல்லது மேற்குலக மயப்படுத்தப்பட்ட நாடுகள் நாகரிகத்தின் 'நியமம்' எனவும், அதை அளவுகோலாக வைத்து நாடுகளை நல்லது-கெட்டது என்றும் வகைப்படுத்துகிறது. இதன்மூலம் அந்த நியமத்தை ஏற்றுக் கொள்ளாத அல்லது கடைப்பிடிக்காத நாடுகளின் இறைமை என்பதை கீழ் நிலையில் வைக்கிறது. அத்தோடு அந்த நாடுகளின் முழுமையான குரலும் அந்தஸ்தும் மறுக்கப்படுகிறது. இந்த அசமத்துவ நிலையானது 2010 இலிருந்து இன்று வரையான "ஈரான்- மேற்குலகு" பேச்சுவார்த்தைகளில் தெளிவாக வெளிப்பட்டிருக்கிறது என்கிறார், Patrick Ringgenberg !

# கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை நவீனமயமாக்கும் பணிகள் ஆரம்பம்









(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ். ஐ.ஏ.காதிர்கான்)

நாட்டின் அபிவிருத்திக்குப் பொதுப் போக்குவரத்து அத்தியாவசியமானது என்பதுடன், அது நிலையானதாகவும் இருக்க வேண்டும். மக்களின் தேவைகளுக்கேற்ப, இலகுவாகச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய அதேநேரத்தில், பொது மக்களுக்கு நெருக்கமான ஒரு பொதுப் போக்குவரத்துச் சேவையே அவசியமாகும்.

நாட்டின் அனைத்து மக்களும் இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு புகையிரதச் சேவையைக் கட்டியெழுப்புவதே அரசின் கொள்கைரீதியான நோக்கமாகும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) நிதிப் பங்களிப்பு மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலில், இலங்கை புகையிரதத் திணைக்களத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் 'புகையிரத வினைத்திறனை மேம்படுத்தும் திட்டத்தின்' முதலாவது அத்தியாயத்தின் கீழ், கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை நவீனமயமாக்கும் முதலாம் கட்டப் பணிகள் வியாழக்கிழமை (09) ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது இதில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# புறக்கோட்டை இ.போ.ச. மத்திய பஸ் நிலையத்திற்கு சேதம் ஏற்படுத்தினால் கடும் நடவடிக்கை :

## - பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன எச்சரிக்கை

( ஐ. ஏ. காதிர் கான் )

புறக்கோட்டை இ.போ.ச. மத்திய பஸ் நிலையத்திற்கு சேதம் விளைவிப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என, போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புறக்கோட்டை இ.போ.ச. மத்திய பஸ் நிலையத்திற்கு இன்று (10) காலை கண்காணிப்பு விஜயமொன்றை மேற் கொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பஸ் நிலையத்திற்கு சேதம் விளைவிப்பது திட்டமிடப்பட்ட குழுக்களின் செயல். இதற்கு எதிராக கடுமையாக சட்டத்தை அமுல்படுத்தவும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நாம் தயார்.

பெண்களுக்கான கழிவறைகளில் பொருத்தப்பட்டிருந்த குழாய்களுக்கு முதல் நாளன்றே (08) சேதம் விளைவிக்கப் பட்ட நிலையில், அவை மீண்டும் பொருத்தப்பட்டன. அதன் பின்னர் 9 ஆம் திகதி இரவு இரண்டாவது முறையாகவும் குழாய்கள் உடைக்கப்பட்டுள்ளன.

இது திட்டமிடப்பட்ட ஒரு குழுவின் செயல். பஸ் நிலையத்தின் பாதுகாப்பு நிலைமை தொடர்பில் அவசரக் கலந்துரையாடல் ஒன்றையும் நடாத்தினோம் அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரசியலில் நமக்குள் வெவ்வேறு



கருத்துக்கள் இருக்கலாம். ஆனால், இது பொதுமக்களின் சொத்து. மக்களின் வரிப்பணத்தில் அமைக்கப்பட்டது. இவற்றுக்குச் சேதம் விளைவிக்க எந்தவகையிலும் இடமளிக்க முடியாது. இதற்கெதிராக நாம் சட்டத்தை அமுல்படுத்துவோம்.

அதேபோல், இங்கு இனிமேல் பாதுகாப்பையும் பலப்படுத்துவோம். சிசிடிவி (ஊஊவுஏ) கெமராக்களின் எண்ணிக்கை தற்போது குறைவாக உள்ளது. அதனையும் விரைவில் அதிகரிக்க எதிர்பார்த்துள்ளோம். இவ்வாறு பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன குறிப்பிட்டார்.

# 'ஒரு உயிர் காப்போம்': கஹடோவிட்ட YMMA நடத்தும் மாபெரும் இரத்த தான முகாம்!



சமூக சேவையை முன்னிறுத்தி, கஹட்டோவிட்ட YMMA கிளையின் ஏற்பாட்டில் விசேட இரத்த தானப் போராட்டம் எதிர்வரும் ஏப்ரல் 19, ஞாயிற்றுக்கிழமை. நடைபெறவுள்ளது.

தேசிய இரத்த வங்கியின் தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கில், "உங்கள் இரத்தம் ஒரு உயிரைக் காக்கும்!" என்ற கருப்பொருளின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

"எவரொருவர் ஓர் உயிரைக் காப்பாற்றுகிறாரோ, அவர் அகிலத்து மனிதர்கள் அனைவரையும் காப்பாற்றியவர் போலாவார்" (அல்குர்ஆன் 5:32)
என்ற புனித குர்ஆன் வசனத்திற்கு இணங்க, மனிதநேயத்தை வளர்க்கும் இந்த உன்னதமான காரியத்தில் கலந்துகொண்டு, இரத்த தானம் செய்து உயிரிழப்பதைத் தவிர்க்க உதவுமாறு பிரதேச மக்களுக்கும் கொடையாளர்களுக்கும் ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# “தமக்கானதோர் இடம் அழகான வாழ்க்கை” எனும் திட்டத்தின் கீழ் நாவிதன்வெளியில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு காசோலை வழங்கி வைப்பு



**(ஏ.எச்.எம்.ஹாரீஸ்- மத்திய முகாம் செய்தியாளர்)**

ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கு அமைய பிரஜாசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் “தமக்கானதோர் இடம் அழகான வாழ்க்கை” எனும் புதிய வீட்டுத் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக, நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 12 பயனாளிகளுக்கு ஷரூபா 10 இலட்சம் பெறுமதியான வீடுகளுக்கான முதற்கட்ட காசோலைகள் வழங்கும் நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் (06) இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதற்கட்டமாக ஒரு வீட்டுக்கு ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. இதன் போது அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினரும் கரையோர பிரதேச அபிவிருத்தி குழுவின் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு காசோலைகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் பே.பிரணவரூபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திலகராணி கிருபைராஜா, நாவிதன் வெளி பிரதேச சபை உறுப்பினர் கே. நிரோஜன், பிரஜா சக்தி தலைவர்கள், கிராம மட்டத்தில் பணியாற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# துரைவி விருது - 2026



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

துரைவியின் 95 ஆவது பிறந்த தின நினைவுப் பேருரையும், துரை மற்றும் ஜெயம் விருது வழங்கல் நிகழ்வும் கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் முன்னாள் அமைச்சின் செயலாளர் எம். வாமதேவன் தலைமையில் (29) நடைபெற்றது.

இந்நிகழ்வின் தொகுப்புரையையும், வரவேற்புரையையும் மேமன்கவி நிகழ்த்தினார். இதன்போது ந. இரவீந்திரன் எழுதிய “தமிழ்ப் பண்பாடு ஊற்றுகளும் ஓட்டங்களும்” என்ற ஆய்வு நூலுக்கும், இரா.சடகோபன் எழுதிய “சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு” என்ற ஆய்வு நூலுக்கும் ராஜன் ஹூல் - ஆங்கிலத்தில் எழுதிய “உயிர்த்த ஞாயிறு அனர்த்தம்” ‘(மறைகரம் வெளிப்பட்டபோது)’ என்ற நூலைத் தமிழில் மொழி பெயர்த்த என்.எம். அமீனின் மொழிபெயர்ப்பு நூலுக்கும் துரைவி விருதுகள் வழங்கி வைக்கப்பட்டது.

பெண் ஊடகவியலாளர் நாகபூசணி கருப்பையாவுக்கு 2026 ஆம் ஆண்டுக்கான “ஜெயம் விருது” வழங்கப்பட்டது.

துரைவி 95 ஆவது பிறந்த தின நினைவுப் பேருவுரையை “பாலின சமத்துவத்தை நசுக்கும் இரட்டைச் சுமை பெண்ணிய உரையாடல்” என்ற தலைப்பில் எழுத்தாளர் பிரமீளா பிரதீபன் உரை நிகழ்த்தினார். நிகழ்வில் நன்றியுரையை ராஜ்பிரசாத் துரை விஸ்வநாதன் வழங்கினார்.

இந்நிகழ்வில், முன்னாள் அமைச்சர் பி. தேவராஜ் மற்றும் முன்னாள் அமைச்சின் செயலாளர் எம். வாமதேவன் ஆகியோர் விருதுகளை வழங்கி வைத்தனர்.

# 12வது தென்கிழக்கு பல்கலைக்கழக சர்வதேச கலை ஆராய்ச்சி கருத்தரங்கம் வெற்றிகரமாக ஆரம்பம்



**(நூருல் ஹுதா உமர்)**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் கலை மற்றும் கலாச்சார பீடம் ஏற்பாடு செய்த 12வது தென்கிழக்கு பல்கலைக்கழக சர்வதேச கலை ஆராய்ச்சி கருத்தரங்கம் (31) கலை மற்றும் கலாச்சார பீட கலை அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

கலை மற்றும் கலாச்சார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாசில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ்.எம். ஜுனைதீன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தார். மேலும் மலேசியா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஐனோல் மட்சியா பி.டி. சுபைரி பிரதான பேச்சாளராக இணைய வழியில் கலந்து கொண்டு ஆராய்ச்சி சார்ந்த முக்கிய கருத்துகளை முன்வைத்து சிறப்புரை நிகழ்த்தினார்.



இலங்கையின் தேசிய கீதத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில், கருத்தரங்கத்தின் இணைப்பாளர் கலாநிதி சி.எம்.எம். மன்சூர் வரவேற்புரையையும் முதலுரையையும் நிகழ்த்தினார். தொடர்ந்து கலை மற்றும் கலாச்சார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாசில் தலைமையுரையையும், பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ்.எம். ஜுனைதீன் சிறப்புரையையும் வழங்கினர். பிரதான பேச்சாளரின் அறிமுகத்தை கருத்தரங்க பொருளாளர் திருமதி ஏ.எப். தஹாரா வழங்கினார். இந்நிகழ்வின் நிறைவாக, கருத்தரங்க செயலாளர் கலாநிதி எம்.ஐ. பாத்திமா கரீமா முடிவுரையை வழங்கினார்.

இந்த சர்வதேச கலை ஆராய்ச்சி கருத்தரங்கத்தில் பல்கலைக்கழக பதிவாளர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், நிதியாளர், நூலகர், சிரேஷ்ட உதவி பதிவாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கம் கலை மற்றும் கலாச்சார துறைகளில் ஆராய்ச்சி பரிமாற்றத்தையும் சர்வதேச ஒத்துழைப்பையும் வலுப்படுத்தும் முக்கிய மேடையாக அமைந்திருந்தது.

# ரக்பி போட்டியில் மடவலை மதீனாவுக்கு வெற்றி







**(பாரா தாஹீர்)**

அகில இலங்கை பாடசாலைக்கிடையிலான டையலொக் ரக்பி நொக்அவுட் இறுதி சுற்று போட்டி கொழும்பு ராஜகிரிய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் மடவலை தேசிய கல்லூரி ரக்பி அணியினர் இரண்டாவது இடத்தைப் பெற்று பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளனர். இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு மடவலை ஜாமிஉல் கைராத் ஜும்ஆ பள்ளிவாசல் முன்றலில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எஸ். ஏ.சீ. எம். ஜிப்ரி தலைமையில் வாகன அணிவகுப்பு பேரணியோடு நடைபெற்ற நிகழ்வில் ஆசிரியர்கள் ,பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் ,மாணவர்கள் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# உளவியல், சமூகவியல், அடையாளம்:

## சுப்பிரமணியம் லோகநாதனின் ஆக்கபூர்வப் பயணம்

### ஒரு பல்துறை எழுத்தாளரின் சிறப்பான படைப்புலகம்

இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டம் பெரியகல்லாற்றைச் சேர்ந்த முன்னாள் ஆசிரியர், உளவியல் மற்றும் சமூக ஆய்வாளர் சுப்பிரமணியம் லோகநாதன் – சமகாலத் தமிழரின் மனவளத்திற்கும் சமூக விழிப்புணர்விற்குமான புத்துணர்வூட்டும் நூல்களை தொடர்ந்து வழங்கி வரும் அரிதான எழுத்தாளர்களில் ஒருவர்.ஈழத் தமிழர்களின் இலக்கியப் பயணத்திலும், தமிழ்நாட்டு வாசகர் வட்டத்திலும், அவரது படைப்புகள் புதிய சிந்தனை களையும், பயனுள்ள உளவியல் நோக்குகளையும் உருவாக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

1990 களில் மட்டக்களப்பில் வெளியான ‘தரிசனம்’ என்ற உளவியல் சஞ்சிகையின் ஆசிரியராகவும், ‘தொண்டன்’ சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் பணியாற்றிய இவர், அனைத்துலக கத்தோலிக்க பத்திரிகையாளர் அமைப்பின் உறுப்பினராகவும் செயல்பட்டார்.1992ஆம் ஆண்டு பிரேசிலில் நடைபெற்ற மாநாட்டில் “இலங்கைக்கான தொடர்புச் சாதன விருது” பெற்றிருப்பது, அவரது பத்திரிகைத் துறையில் பெற்ற உயரிய அங்கீகாரமாகும்.

********

### மனநலம் - உளவியலின் ஆழத்தை எளிமையாக விளக்கும் முதற் படைப்பு (2024)

2024 பங்குனி 9 ஆம் திகதி வெளியிடப்பட்ட அவரது முதல் நூல் ‘மனநலம்’, உடல்நலத்தை விட மனநலத்தின் அவசியம் என்ன என்பதை உளவியல் கோட்பாடுகள் மூலம் ஆழமாக ஆராய்கிறது.

267 பக்கங்களைக் கொண்ட இந்த நூல், வாசகர்களிடையே “இலக்கிய பரப்பில் புதிய வடிவமைப்பு” என்ற பாராட்டைப் பெற்றது. மன அழுத்தம், குடும்பத் தொடர்புகள், நவீன வாழ்வியல் சவால்கள் ஆகியவற்றை எளிய மொழியில் விளக்கி, பொது வாழ்க்கைக்கும் துறைத்திறனுக்கும் இடையே ஒரு பாலமாக அமைகிறது.

********

### பெற்றோரியம் - பிள்ளை வளர்ப்பை அறிவியல் பார்வையில் அணுகும் நூல் (2025)

2025 ஆவணி 4ஆம் திகதி வெளியிடப்பட்ட இரண்டாவது படைப்பு ‘பெற்றோரியம்’, பெற்றோர்கள் பிள்ளைகளைப் புரிந்து கொள்வதற்கும்,















ஆசிரியர்கள் மாணவர்களை வழிநடத்துவதற்குமான ஒரு முழுமையான உளவியல் – சமூகவியல் கைநூல் எனலாம்.

300 பக்கங்களைத் தாண்டிய இந்த ஆக்கத்தில்,

* பெற்றோரின் பாணிகள்
* குழந்தைகளின் உளவியல் வளர்ச்சி
* ஆசிரியர்களின் பங்கு
* அனுபவ அடிப்படையிலான ஆலோசனைகள்

என பல பரிமாணங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இது, பெற்றோர்கள் மட்டுமல்லாது மாணவர்கள், ஆசிரியர்கள், சமூகப் பணியாளர்கள் அனைவரும் படிக்க வேண்டிய கையேடு என்பது குறிப்பிடத்தக்கது.

********

### முதுமை வாழ்வின் முழுமை - உலகளாவிய முதுமைப்பருவ விழிப்புணர்வுக்கான நூல்

மூன்றாவது நூலாக வெளிவந்த ‘முதுமை வாழ்வின் முழுமை’, முதியோரின் உளவியல் தேவைகளையும், அவர்களைச் சுற்றியுள்ள உறவுகளின் பொறுப்புகளையும் ஆழமாக ஆராய்கிறது.

270 பக்கங்களை உள்ளடக்கிய இந்த நூல்:

* முதியோர் இல்லங்களின் உருவாக்கம்
* பிள்ளைகள் – பெற்றோர் உறவின் உளவியல் மாற்றங்கள்
* சமூகப் பாதுகாப்பு சவால்கள்
* முதுமைப்பருவத்தின் பொருள் –உளவியல் பரிமாணங்கள்

என காலத்தால் வேண்டப்படும் தலைப்புகளை மிக விரிவாக விமர்சனப் பார்வையில் பதிவு செய்கிறது.

********

### அடையாள உணர்வுகளும் தமிழர் உளவியலும் - நான்காவது படைப்ப் சமூகவியல் பார்வையில் வலிமையான உரை (2026)

பங்குனி 7ஆம் தேதி வெளியான நான்காவது நூல் ‘அடையாள உணர்வுகளும் தமிழர் உளவியலும்’, தமிழரின் மொழி, அடையாளம், அரசியல், கலாசாரம் ஆகியவற்றை உளவியல் அடித்தளத்தில் துல்லியமாக ஆராய்கிறது.

இந்த நூலின் சிறப்புகள்:

* தமிழ் மொழியின் ஆழமான தன்மைகள்
* இலங்கை – தமிழ்நாடு தமிழர் அரசியல் வரலாற்றுப் பயணம்
* தமிழ் – முஸ்லிம் உறவுகளின் உளவியல் ஆய்வு
* அடையாள அரசியலின் சமூக விளைவுகள்

இந்தப் படைப்பு மிகப் பெரிய ஆவண மதிப்புடையதென விமர்சகர்கள் பாராட்டுகின்றனர். இது சமீபத்தில் சென்னை சந்திரகலா பதிப்பகத்தால் புதிய அட்டையுடன் மீள் வெளியீடு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

### கடைசி வார்த்தை - பல்துறை ஆக்கபூர்வத்திற்கான பாராட்டும் எதிர்பார்ப்பும்

உளவியல், சமூகவியல், அரசியல், அடையாளம் ஆகிய துறைகளில் தொடர்ச்சியாக ஆழமான, பயனுள்ள நூல்களை வழங்கி வரும் சுப்பிரமணியம் லோகநாதன் – நவீன தமிழ் இலக்கிய உலகில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளார்.

அவருடைய படைப்புகள்:

* ஆராய்ச்சித் தன்மையும்
* எளிய மொழிப்பாணியும்
* சமூகப் பயனும்
* நூல் வடிவமைப்பின் தனித்துவமும்

கொண்டவை என்பதால், எதிர்பார்ப்பை மீறிச் செல்லும் படைப்புலகப் பயணத்திற்கு அவர் தகுதியானவர். அவரது வருங்கால படைப்புகளுக்காக ஆவலுடன் காத்திருக்கிறோம் மேலும் பல ஆக்கங்களை எழுத அவருக்கு என் மனமார்ந்த வாழ்த்துகளும் ஊக்கமும் உரித்தாகட்டும்.

**– நூல் விமர்சனம் –**
**இர்ஷாத் றஹ்மத்துல்லா**
**சிரேஷ்ட ஊடகவியலாளர்**

# சமுர்த்தி அபிமானி வர்த்தகக் கண்காட்சியும் விற்பனைச் சந்தையும்





**(இஸட்.ஏ.றஹ்மான்-**
**ஒலுவில் விசேட செய்தியாளர்)**

சம்மாந்துறை பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட சமுர்த்தி அபிமானி வர்த்தகக் கண்காட்சியும், வி-ற்பனைச்
சந்தையும் இன்று 2026.04.11ம் திகதி சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் மிலேனியம் சமுர்த்தி வங்கிக்கு
அருகாமையில் பிரதேச செயலாளர் எஸ்.எல் .எம்.ஹனிபா அவர்களின் வழிகாட்டலில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம். ஹுசைன் தலைமைய-ில் நடை பெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் வீ. வாசித் அஹமட்
அதிதிகளாக கணக்காளர் எஸ்.எல். சத்தார் மேர்சா, மாவட்ட சமுர்த்தி உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் இஸட்.ஏ.றஹ்மான் மற்றும் முன்னாள் தலைமைப்பீட



முகாமையாளர்களான யூ.எல் சலீம் ,ஏ.எல்.ஹமீட் சமுர்த்தி வங்கி



முகாமையாளர்கள் , சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்





மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# எதிர் கட்சி தலைவரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



உதயமாகும் சிங்கள தமிழ் புத்தாண்டு இலங்கையில் வாழும் அனைவருக்கும் அமைதியும் மகிழ்ச்சியும் சுபீட்சம் நிறைந்த புத்தாண்டாக அமையட்டும் என்று உளமார வாழ்த்துகின்றேன். சிங்கள தமிழ் புத்தாண்டு என்பது நம்மிடம் உள்ள மகத்தான கலாசார விழாவாகும். ஒரு கலாசார விழாவின் அடித்தளம் உருவாகுவது அதில் காணப்படும் ஆன்மீக, நெறிமுறை, கலாசார மற்றும் பொழுதுபோக்கு காரணிகளின் அடிப்படையில் ஆகும். சிங்கள தமிழ் புத்தாண்டு இந்த அனைத்து காரணிகளின் வழியாகவும் நமக்கு ஒரு மகத்தான பாரம்பரியத்தின் மரபுரிமையை வழங்கியுள்ளது. இந்த மரபுரிமையைப் பாதுகாத்து எதிர்காலத்திற்காகப் பேணிக்காத்துச் செல்வது நமது கடமையாகும்.

அத்தகைய மரபுரிமையின் செயல்முறையில் சமூகத்தினுள் நிச்சயமற்ற உணர்வுகளை ஏற்படுத்தும் விதத்தில் செயல்படுவது அல்லது அத்தகைய நிகழ்வுகளை சரியான முறையில் கையாளுவதில் அரசாங்கம் தவறுவதென்றால், அது நம்மிடம் உள்ள கலாசார மரபுரிமைகளைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் பொறுப்பை புறக்கணிப்பதாகும். புத்தாண்டு சுப நேரம் தொடர்பாக எழுந்த சர்ச்சையில் அரசாங்கம் தலையிட்ட விதம், நமது கலாசாரத்தின் மதிப்பீடுகள் மீது அது காட்டும் அக்கறை கேள்விக்குரியது என்பதை வெளிப்படுத்துகின்றது.

புத்தாண்டின் உதயம் என்பது கடந்த தவறுகளை திருத்திக் கொண்டு புதிய வருடத்தில் அடியெடுத்து வைப்பதாகும். கடந்த ஆண்டில் நாட்டு மக்கள் பல சவால்களை எதிர்கொண்டனர் என்பது இரகசியமில்லை. கடுமையான பொருளாதார அழுத்தத்தில் சமூகத்தின் எல்லா தரப்பு மக்களும் மன நிம்மதியின்றி தம் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். அத்தகைய சூழ்நிலையில் தேவையானது குறுகியகால தீர்வுகளல்ல, நீண்டகால தீர்வுகளின் வழியாக மக்களை வலிமைப் படுத்துவதாகும். உதயமாகும் புத்தாண்டில் அதற்கான நிலையான செயல்திட்டத்திற்கு நாம் முழுமையாக அர்ப்பணிப் போம் என்பதை தெரிவிக்கின் றேன்.

சிங்கள தமிழ் புத்தாண்டு அமைதியாக நமக்குச் சொல்லிக் கொடுக்கும் நல்லிணக்கம் பற்றிய மகத்தான பாடத்தை வழிகாட்டியாகக் கொண்டு அதற்காக நாம் அர்ப்பணிப்போம்.

**சஜித் பிரேமதாச**
**இலங்கை பாராளுமன்றத்தின்**
**எதிர்க்கட்சித் தலைவர்**

# சாய்ந்தமருது அல்-ஜலாலில் இடம்பெற்ற "சுரகிமு ஸ்ரீலங்கா" விழிப்புணர்வு நிகழ்வு






**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

ஜனாதிபதி செயலகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு ஆகியன இணைந்து கிறீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் 'சுரகிமு லங்கா' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்த விழிப் புணர்வு நிகழ்வு சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தில் (10) நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.எம். ஹிர்வஹான் தலைமையில் நடைபெற்ற இந்த விசேட காலை ஆராதனை நிகழ்வில், கல்முனை பிராந்திய சிரேஷ்ட உதவி பொறியியலாளர் வீ.ரீ. சம்பந்தன் வளவாளராகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில், மின்சார சேமிப்பு விழிப்புணர்வுகள் குறித்து மின்சாரத்தை வீணாக்குவதைத் தவிர்த்து, தேசத்தின் முன்னேற்றத் திற்காக எவ்வாறு பொறுப்புடன் மின்சாரத்தைப் பயன்படுத்துவது மற்றும் எதிர்வரும் விடுமுறை காலத்தில் வழங்கப்பட்ட கையேட்டினைப் பயன்படுத்தி எவ்வாறு பாடசாலை மட்ட மின்சக்தியை சேமிப்புப் போட்டியில் கலந்து கொள்ளல் என்பது தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன், இரவு 7:00 மணி முதல் இரவு 10:00 மணி வரையிலான உச்ச மின் பயன்பாட்டு நேரத்தில் மின் பாவனையைக் குறைத்தல், பயன்படுத்தாத மின் இணைப்புகளைத் துண்டித்தல், மின் அழுத்தியை ஒரே நேரத்தில் பயன்படுத்தி ஆடைகளை அழுத்துதல், குளிர்சாதனப்பெட்டியை வினைத்திறனாகப் பயன்படுத்தல் போன்ற அவசியமான ஆலோசனைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டதுடன், மின்சக்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட மின்சக்தியை எவ்வாறு சேமித்தல் தொடர்பான ஆவணப்படமும் மாணவர்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டது.

பிரதி அதிபர் எம்.ஏ.எம். ஸிராஜின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் உட்பட மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# மத்திய கிழக்கு போர் சூழலில் ரஷ்யாவின் எரிபொருள் உதவியானது இலங்கையில் பாதிப்பை குறைக்க உதவும்

**நீதிக்கும் சமாதானத்திற்குமான முஸ்லிம் இளைஞர் மன்றம் தெரிவிப்பு!**

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**



அமெரிக்க, இஸ்ரேல் - ஈரான் யுத்தம் காரணமாக ஆசிய நாடுகள் உள்ளிட்ட உலகளாவிய அளவில் எரிபொருள் நெருக்கடி நிலை உருவாகியுள்ள சூழலில், இலங்கைக்கு 7.5 பில்லியன் அமெரிக்க டாலர் பெறுமதியான பெற்றோலிய உதவியை வழங்க முன்வந்துள்ள ரஷ்ய கூட்டாட்சி அரசின் நடவடிக்கை மிகவும் பாராட்டத்தக்கதென நீதிக்கும் சமாதானத்திற்குமான முஸ்லிம் இளைஞர் மன்றம் தெரிவித்துள்ளது.

கல்முனையை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகின்ற மேற்படி அமைப்பின் செயலாளர் கலீல் எஸ். முஹம்மது வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது

எமது ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் இராஜதந்திர முயற்சி காரணமாகவும் இலங்கைக்கான ரஷ்ய தூதரகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பி னாலும் இவ்விடயம் சாத்தியமாகி யுள்ளது.

ரஷ்யாவின் இந்த உதவியானது எமது நாட்டின் தற்போதைய எரிசக்தி தேவைகளை பூர்த்தி செய்வதோடு, பொருளாதார நிலைத்தன்மையை உறுதிப் படுத்தும் முக்கிய ஆதாரமாக அமைந்துள்ளதுடன் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கும், எரிசக்தி துறையில் நிலைத்தன்மை ஏற்படுத்துவதற்கும் முக்கிய பங்களிப்பாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவி வரும் யுத்த சூழ்நிலை காரணமாக சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள விநியோக தடைகள் மற்றும் விலை உயர்வுகள் ஆகியவற்றின் பின்னணியிலும், இலங்கையுடன் கொண்டுள்ள நட்பு மற்றும் நல்லிணக்கத்தை முன்னிறுத்தி ரஷ்யா இத்தகைய உதவியை வழங்க முன்வந்திருப்பது பெரும் வரப்பிரசாதமாகும்.

இந்த நடவடிக்கை, இலங்கை மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் சிரமங்களை குறைப்பதோடு, போக்குவரத்து, மின்சாரம் உற்பத்தி மற்றும் தொழில் துறைகளின் தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கும் ஆதரவாக அமையும்- என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொருளாளர் ரஹ்மத் மன்சூர் புதல்வி திருமணம்

**(எம். கே. ஷாகுல் ஹமீது)**




ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொருளாளர் மற்றும் கல்முனை முன்னாள் துணை மேயர் ரஹ்மத் மன்சூரின் புதல்வி மணமகள் அனிகாவுக்கும், கொழும்பு தொழிதிபர் ஹாஜி சியா மஜீத் மகன் மணமகன் அஹமதுக்கும் திருமணம் மற்றும் வலிமா விருந்து கடந்த வெள்ளிக்கிழமை (03) கொழும்பு கிங்ஸ்பெரி நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்றது.

மணமக்களை பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், எம்.எஸ்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், எம்.எஸ். உதுமாலெப்பே, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம். ஃபௌஸி, ஃபைசல் காசிம், முஷாரப் முதுநபீன், கல்முனை முன்னாள் மேயர் ஷிராஸ் மீராஷாஹிப், கொழும்பு மௌலவி அல் ஹிக்மா நிறுவனம் பணிப்பாளர் மௌலவி எம். எச்.ஷைஹூத்தீன் மதனி, மணிச்சுடர் நாளிதழ் ஊடகவிய லாளர் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது மற்றும் ரிஸ்லி முஸ்தபா உள்ளிட்ட பல முக்கிய அரசியல் மற்றும் சமூக தலைவர்கள் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாத்தளை அஹதிய்யாவின் விழிப்புணர்வு நிகழ்வு



**(உக்குவளை நிருபர்)**

தேசிய ஊழல் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மாத்தளை அஹதிய்யா அறநெறி பாடசாலை சம்மேளனத் தின் ஏற்பாட்டில் அதுகுறித்த விழிப்புணர்வுக் கூட்டமொன்று மாத்தளை சாஹிரா தேசிய பாடசாலை அரங்கில் அன்மையில் நடைபெற்றது. இச் சம்மேளனத் தலைவரும் கல்விப் பணிப்பாளருமான கவிஞருமான வறக்காமுரயூர் எம். ராசிக், செயலாளர் எம். பைசல் ஆகியோர் கலந்து கொண்டு குறிப்பிட்ட தலைப்பில் விழிப்புணர்வு உரைகளை வழங்கினர்

இந்நிகழ்வில் மாத்தளை பிரதேச அஹதிய்யா அறநெறி பாடசாலை களின் ஆசிரிய ஆசிரியர்கள் பொருப்பாளர்கள் அதிபர்கள் எனப் பலரும் சமூகமளித்திருந்தனர்.

# தோல்வியில் முடிந்த ஈரான் – அமெரிக்கா பேச்சுவார்த்தை!


**எஸ்.ஏ. சுஃப்யான்**
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

அமெரிக்காவுடன் அமைதி பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் தீவிர முயற்சி மேற்கொண்டது. இதன் விளைவாக, ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாஃப் (Mohammad Bagher Qalibaf) தலைமையிலான உயர்மட்டக் குழு ஏப்ரல் 11



அன்று (நேற்று) இஸ்லாமாபாத் வந்தடைந்தது. இந்தக் குழுவில் வெளியுறவு மந்திரி சையது அப்பாஸ் அராக்சி, பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் அலி அக்பர் அகமதியன், மத்திய வங்கி கவர்னர் அப்துல் நாசர் ஹிம்மதி உள்ளிட்டோர் இடம்பெற்றனர்.

பாதுகாப்பு, ராணுவம், பொருளாதாரம் மற்றும் சட்டம் தொடர்பான அதிகாரிகளும் இணைந்திருந்தனர். இது 1979 ஈரான் இஸ்லாமிய புரட்சிக்குப் பிறகு அமெரிக்கா-ஈரான் இடையே நடைபெறும் மிக உயர்மட்ட நேரடி பேச்சுவார்த்தையாகக் கருதப்படுகிறது.

காலிபாஃப், இஸ்லாமாபாத் வந்ததும் நிருபர்களிடம் பேசுகையில், “அமெரிக்கர்களுடனான எங்கள் அமைதி முயற்சிகள் எப்போதும் தோல்வியிலும் வாக்குறுதி மீறல்களிலுமே முடிவடைந்துள்ளன. இருப்பினும், எங்களுக்கு நல்லெண்ணம் உள்ளது. ஆனால் நம்பிக்கை இல்லை“ என்று தெரிவித்தார். மேலும், அவர் பயணித்த சிறப்பு விமானத்தில், மினாப் நகரில் தாக்குதலில் பலியானவர்களின் புகைப்படங்களை எடுத்து வந்ததாகவும், தனது எக்ஸ் (முன்பு ட்விட்டர்) பக்கத்தில் அதைப் பகிர்ந்ததாகவும் தெரிவித்தார். இது ஈரானின் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது.

அமெரிக்க தரப்பில் துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் தலைமையிலான குழு பங்கேற்றது. இதில் டொனால்ட் டிரம்பின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ஜாரெட் குஷ்னர் உள்ளிட்டோர் அடங்குவர். பேச்சுவார்த்தைக்கு முன்பு டிரம்ப், வான்ஸூக்கு வாழ்த்து தெரிவித்ததாகவும், “என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம். அவர்கள் ராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டுவிட்டனர்“ என்று கூறியதாகவும் தகவல்கள் வெளியாகின.

இஸ்லாமாபாத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் கடுமையாக்கப்பட்டன. செரீனா ஓட்டலில் (Serena Hotel) பேச்சுவார்த்தை நடைபெற்றது. தெருக்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன் வாகனப் போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நடமாட்டம் தடை செய்யப்பட்டது. முதலில் ஈரான் குழு பாகிஸ்தான் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியது. பின்னர் அமெரிக்க குழுவுடன் நீண்ட பேச்சுவார்த்தை தொடங்கியது.

சனிக்கிழமை மதியம் 1 மணியளவில் தொடங்கிய இந்தப் பேச்சு ஏறக்குறைய 15 மணி நேரம் நீடித்து, அதிகாலை 3.40 மணி வரை நடைபெற்றது. இரு தரப்பும் எழுத்து வடிவ ஆவணங்களை பரிமாறிக் கொண்டனர். பேச்சுவார்த்தையின் முக்கிய அம்சங்களில் அணுசக்தி திட்டம், பொருளாதாரத் தடைகள் நீக்கல், ஹார்முஸ் ஜலசந்தி கட்டுப்பாடு, லெபனான் தொடர்பான இஸ்ரேல் தாக்குதல்கள் மற்றும் நீண்டகால அமைதி ஒப்பந்தம் ஆகியவை இடம்பெற்றன. ஈரான் 10 அம்ச திட்டத்தை முன்வைத்துள்ளது.

பேச்சு இரண்டாவது நாளாகவும் தொடரும் என எதிர்பார்க்கப்பட்டாலும், சில அடிப்படை வேறுபாடுகள் காரணமாக இது தோல்வியில் முடிந்ததாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சூழலில் ஈரான் உடனான போர் தொடங்கிய பிறகு, முதல் முறையாக அமெரிக்காவின் இரண்டு போர்க்கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்துள்ளன. அமெரிக்க கடற்படையின் ஏவுகணை தாங்கி அழிக்கும் கப்பல்கள் எந்தவிதமான இடையூறும் இன்றி இந்தப் பாதையைக் கடந்ததாக “தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல்“ செய்தி வெளியிட்டிருக்கிறது. இந்த ஆபத்தான ராணுவ நடவடிக்கை குறித்து ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள அந்நாட்டு அதிகாரிகளிடம் எந்தவித ஆலோசனையும் அமெரிக்கா செய்யாமலேயே கடந்ததாக தெரிகிறது.

தனது “ட்ருத் சோஷியல்“ தளத்தில் இது குறித்து பதிவிட்டுள்ள ட்ரம்ப், ”நாங்கள் இப்போது ஹார்முஸ் ஜலசந்தியைச் சுத்தப்படுத்தும் பணியைத் தொடங்கிவிட்டோம். சீனா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு இதைச் செய்யும் தைரியமோ அல்லது மனமோ கிடையாது. அவர்களுக்கு ஒரு உதவியாகத்தான் இதை நாங்கள் செய்கிறோம்.” என்றார்.

மேலும், இந்தப் போரில் ஈரான் படுதோல்வியைச் சந்தித்து வருவதாகவும், கடலில் ஈரான் விரித்து வைத்துள்ள கண்ணிவெடிகளால் மட்டுமே



இனி கப்பல்களுக்குச் சிறு அச்சுறுத்தல் இருக்கக்கூடும் என்றும் அவர் கிண்டலாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

இது ஒரு பக்கம் இருக்க.. வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்த டிரம்ப், சீனாவின் தலையீடு குறித்த தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார். அதாவது அமெரிக்க உளவுத்துறை அமைப்புகளின் தகவல்படி, அடுத்த சில வாரங்களுக்குள் ஈரானுக்குப் புதிய வான் பாதுகாப்பு அமைப்புகளைச் சீனா வழங்கக்கூடும் எனச் சொல்லப்படுகிறது. அதிலும் இந்த பதற்றமான சூழலில் நேரடியாகச் சீனாவில் இருந்து ஈரானுக்கு ஆயுதங்கள் சென்றால் அது தேவையில்லாத குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதால்.. முதலில் வேறு நாடுகளுக்கு அனுப்பி.. பிறகு அங்கிருந்து ஈரானுக்கு இந்த ஆயுதங்களைச் சீனா கொண்டு செல்லத் திட்டமிட்டுள்ளதாக சி.என்.என் (CNN) செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து வெள்ளை மாளிகையில் பேசிய டிரம்ப், ”சீனா அப்படிச் செய்தால், அவர்கள் பெரிய பிரச்சனைகளைச் சந்திப்பார்கள்” எனத் ஒரே வரியில் கூறிவிட்டார்.. அடுத்த மாதம் சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்திக்க டிரம்ப் திட்டமிட்டுள்ள நிலையில், இந்த ஆயுத விவகாரம் அந்தச் சந்திப்பையே கூட பாதிக்கும் என்றும் அஞ்சப்படுகிறது.

அதேநேரம் மறுபுறம், சீனா இந்தக் குற்றச்சாட்டுகளைத் திட்டவட்டமாக மறுத்துள்ளது. அவர்கள் இது தொடர்பாக, ”எந்தவொரு தரப்பிற்கும் நாங்கள் ஆயுதங்களை வழங்கவில்லை.. அமெரிக்கா ஆதாரமற்ற வதந்திகளைப் பரப்புவதை நிறுத்த வேண்டும்” என வாஷிங்டனில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

உலக எண்ணெய் விநியோகத்தில் 20மூ செல்லும் ஹார்முஸ் பாதையை ஈரான் திறக்க வேண்டும் என்பது ஒரு முக்கியமான நிபந்தனையாக பேச்சுவார்த்தையில் அமெரிக்கா முன் வைத்து வருகிறது. அதேநேரம் போர்க்கப்பல்கள் கடலில் சீறிக்கொண்டிருக்க, மறுபுறம் பாகிஸ்தானில் ஈரான் மற்றும் அமெரிக்காவின் உயர்மட்ட அதிகாரிகள் சனிக்கிழமை முதல் அமைதிப் பேச்சுவார்த்தையைத் தொடங்கி இருக்கிறார்கள்.

இந்த பேச்சுவார்த்தை குறித்து கருத்து தெரிவித்த பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் , ”இரு தரப்புப் பிரதிநிதிகளும் ஆக்கபூர்வமாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான உறுதிப்பாட்டைப் பாராட்டிய பிரதமர், இந்தப் பேச்சுவார்த்தைகள் இப்பிராந்தியத்தில் நீடித்த அமைதியை ஏற்படுத்துவதற்கான ஒரு படிக்கல்லாக அமையும் ” என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தப் பிராந்தியத்தில் நிலையான அ மைதியை நோக்கிய முன்னேற்றத்தை அடைவதில், இரு தரப்பினருக்கும் தொடர்ந்து உதவிகளை வழங்க பாகிஸ்தான் ஆவலுடன் காத்திருக்கிறது என்று பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் மீண்டும் வலியுறுத்தினார்.

அதேநேரத்தில் டிரம்ப், ”ஒப்பந்தம் நடந்தாலும் சரி, நடக்காவிட்டாலும் சரி... இறுதியில் வெற்றி நமதே. எனக்கு அதில் எந்தவொரு வித்தியாசமும் தெரியவில்லை” எனத் தனது ஸ்டைலில் பதிலளித்தார். இதற்கிடையே ஹார்முஸ் ஜலசந்தியில் ஈரான் சில கண்ணிவெடிகளை வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், அமெரிக்கக் கடற்படை அங்குக் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எம்.எஸ்.எம்.ஸாகிர்



# உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்: இந்த அரசின் மீது அழுத்தம் இருக்கிறதா?

## பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம்

முக்கியமான வழக்குகளில் நிச்சயமாக சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் வந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறான வழக்கில் ஏன் அந்த ஒத்துழைப்பு வழங்கப்படுவதில்லை என்பது ஒரு பெரிய கேள்வி. எனவே தான், இந்த அரசாங்கத்தின் மீதும் ஏதேனும் அழுத்தம் இருக்கிறதா? என்ற சந்தேகம் எமக்கு எழுகிறது என பாராளுமன்றத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் பற்றிய விவாதத்தில் உரையாற்றும் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09), நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சபை ஒத்தி வைப்புவேளைப் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, “கௌரவ தலைமை தாங்கும் உறுப்பினர் அவர்களே, நான் உரிய விடயதானம் தொடர்பாகப் பேசுவதற்கு முன்னர், ஆளுங்கட்சி அமைச்சர்கள் இருவர் முன்வரிசையில் அமர்ந்திருப்ப தால் அவர்களூடாக அரசாங்கத்திற்கு ஒரு கோரிக்கையை விடுக்க விரும்புகிறேன்.

இப்போது மத்திய கிழக்கில் போர்ச் சூழல் ஓரளவிற்குத் தணிந்து, போர் நிறுத்தத்திற்குச் சென்றுள்ள சந்தர்ப்ப த்தில், ஈரானியக் கப்பலில் இருந்து காப்பாற்றப்பட்ட இளம் மாலுமிகள் சிலர் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக ஈரானுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

இது குறித்து மீண்டும் ஒருமுறை அமெரிக்காவிடம் போய் கேட்காமல், நீங்கள் நடுநிலையானவர்கள் என்றால், காயமடைந்த மற்றும் காப்பாற்றப்பட்ட அந்த இளம் மாலுமிகளை ஈரானுக்குத் திருப்பி அனுப்ப தயவு செய்து நடவடிக்கை எடுங்கள். அவர்கள் இளம் பயிற்சி மாணவர்கள் (Cadets), எனவே இந்த போர்நிறுத்தக் காலத்திலேயே அவர்களை ஈரானுக்குத் திருப்பி அனுப்புவது நமது கடமையாகும்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு டொனால்ட் ட்ரம்ப் சொன்னால் என்ன நடக்கும் என்பது எங்களுக்குத் தெரியாது. சில விமானங்களை மத்தளையில் தரையிறக்க அமெரிக்கர்கள் கேட்டதாக ஜனாதிபதி ஒரு பெரிய பொய்யைக் கூறி, நமது துறைமுகங்களுக்கு கப்பல் வருவதைத் தாமதப்படுத்துவதைத் தவிர்த்தார். அதனால் தான் இறுதியாக அந்த கப்பல் அழிக்கப்பட நேர்ந்தது. இறுதியில் அமெரிக்கா அந்த கப்பலைத் தாக்குவதற்கு நாம் வழிவகுத்தோம்.

நாம் நடுநிலையானவர்கள் என்று உரிமை கோரினோம். ஆனால், உண்மையில் நமது செயற்பாடுகள் உண்மையான நடுநிலையைக் காட்டவில்லை. ஆகையால், குறைந்த பட்சம் இந்த இக்கட்டான தருணத்திலாவது, அந்த இளம் மாணவர்களை இந்த போர்நிறுத்தக் காலத்திலேயே உடனடியாக ஈரானுக்குத் திருப்பி அனுப்புமாறு நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது உரிய விடயத்திற்கு வருகிறேன். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் குறித்து பேசும்போது நான் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது என்னவென்றால், குறிப்பாக ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகிய உயர் பொலிஸ் அதிகாரிகள் மீது எமக்கு முழுமையான நம்பிக்கை இருக்கிறது.

அந்த நம்பிக்கையின் அடிப்படையில், இந்த விசாரணையில் புதிய திசையில் செல்லும் என்று நாங்கள் எதிர்பார்க்கி றோம். அந்த அதிகாரிகள் இருவருக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

இது குறித்து இப்போது அமைச்சர் சில விடயங்களை விளக்கினார்.

ஆனால், சில நாட்களுக்கு முன்னர் நீதவான் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது கைது செய்யப்பட்டுள்ள புலனாய்வுத் துறை அதிகாரி சுரேஷ் சாலேயின் பிரஸ்தாப பிணை மனுவின் போது சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து யாரும் அங்கு சமுகமளித்திருக்கவில்லை. அதனால் நீதவான் கேட்ட கேள்விகளுக்கு இந்த குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் பதிலளிக்க முடியாமல் போனதை நாம் கண்டோம். நீதியமைச் சரும் இங்கு இருக்கிறீர்கள்.

இவ்வாறான முக்கியமான வழக்குகளில் நிச்சயமாக சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் வந்து ஒத்துழைப்பு வழங்கியிருக்க வேண்டும். ஏன் அந்த ஒத்துழைப்பு வழங்கப்படுவதில்லை என்பது ஒரு பெரிய கேள்வி. எனவேதான் இந்த அரசாங்கத்தின் மீதும் ஏதேனும் அழுத்தம் இருக்கிறதா என்ற சந்தேகம் எமக்கு எழுகிறது. எனவே அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு நாம் கோரிக்கை விடுக்கிறோம்.

இந்தச் சம்பவம் குறித்து நாங்கள் தொடர்ந்து ஆராயும் போது பல விடயங்களைக் காண்கிறோம். குறிப்பாக, இப்போது ஒரு முக்கியமான சாட்சியாக சஹ்ரானின் மனைவி ஹாதியாவை முன்வைக்க முடியும். ஆனால் அவர் சாட்சியம் அளிக்க முற்பட்டபோது சட்டமா அதிபர் திணைக்களம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. ஏன், இந்த எதிர்ப்பு? ஆனால் இறுதியில் ஆணைக்குழுவின் தலைவரின் முடிவின்படி அந்த சாட்சியம் இரகசியமாகப் பதிவு செய்யப்பட்டது. அது இப்போது அறிக்கையில் உள்ளது.

ஆனால் அவற்றைப் பார்க்கும்போது, ஹாதியாவை ஒரு குற்றவாளியாகக் கருதி அவர் மீது இப்போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அந்த வழக்குத் தாக்கலைத் தவிர்த்து அவரை ஒரு சாட்சியாக வைத்திருந்தால், இந்த வழக்கு மூலம் இன்னும் பல விடயங்களை நிரூபித்திருக்க முடியும்.

அது மட்டுமல்ல, ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பொறுப்பாக இருந்த காலத்திலேயே தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, அஹ்னாப் ஜஸீம், அஸாத் ஸாலி மற்றும் டொக்டர் ஷாபி தவிர்ந்த ஏனைய அனைத்து வழக்குகளுக்கும் ஷானியின் காலத்தில் பெறப்பட்ட சாட்சியங்களே பயன்படுத்தப் பட்டுள்ளன. அதன் பின்னர் ஒன்றும் நடக்கவில்லை. எனவே இந்த விடயத்தை முன்னெடுத்துச் செல்லும்போது இன்னும் பல விடயங்கள் வெளிவருவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

குறிப்பாக, சஹ்ரான் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்கு அருகிலுள்ள அடுத்த அறையில் தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் மூவர், இந்த குண்டுவெடிப்புக்கு பின்னர் ஹோட்டலுக்குச் சொல்லாமல் நேரடியாகத் தமது நாட்டுக்குச் சென்று, அங்கிருந்து ஹோட்டல் முகாமையாளருக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மூவரும் ஏன் அங்கு இருந்தார்கள்? நாட்டை விட்டு ஏன் அவ்வாறு வெளியேறினார்கள்?

அது குறித்து இன்னும் தேடப்படவில்லை. அது குறித்து தேடிப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்லாது, இன்னும் பல சம்பவங்கள் உள்ளன.

குறிப்பாக, வவுணதீவு சம்பவம் மற்றும் ஆசாத் மௌலானாவின் அந்த சனல் 4 அலைவரிசைச் சம்பவத்திற்குப் பின்னர், இப்போது ஆசாத் மௌலானாவின் சாட்சியத்தைப் பதிவு செய்ய வேண்டிய தேவை உள்ளது.

அதற்குத் தேவையான சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

மேலும் சாட்சிகள் பாதுகாப்புச் சட்டம் ீசழவநஉவழைெ ழக றுவைநெளளநள யுஉவ) உள்ளது. எனவே இந்த ஏற்பாட்டைப் பயன்படுத்தி ஆசாத் மௌலானாவின் சாட்சியத்தைத் தொலைதூரத்தில் இருந்தேனும் (Remotely) பதிவு செய்ய முடியும்.

இந்த முழு விசாரணையும் சரியான திசையில் செல்வதற்கு இது மிக விரைவாகச் செய்யப்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

ஆகையால்தான் இந்த விடயங்களை நாம் முன்வைக்கிறோம்.

இதனுடன், இதுவரை கடமையாற்றிய இந்த அதிகாரிகளுக்கு அரசாங்கத்தினால், குறிப்பாக சட்டமா அதிபர் திணைக்களத் தினால் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

இதன் மூலம் இந்த விசாரணையின் ஊடாக இறுதியாக இந்தச் சம்பவத்தின் உண்மையான மூளையாகச் செயற்பட்ட நபரைக் கண்டறிய முடியும். நன்றி” என்றார்.

# ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறும் மௌபியாவுக்கு கஹட்டோவிட்டவில் கௌரவம்








கம்பஹா மற்றும் மினுவாங்கொட கல்வி வலயங்களில் நீண்டகாலமாக ஆரம்பப்பிரிவு ஆசிரிய ஆலோசக ராகப் பணியாற்றி, கல்வித்துறைக்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கிய கஹட்டோவிட்டவைச் சேர்ந்த திருமதி M.M.K. மௌபியா (ஆழரகலைய) அவர்கள் தனது ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

அவரது சிறப்பான சேவையைப் பாராட்டியும், அவருக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும் கஹட்டோவிட்டவைச் சேர்ந்த ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் இணைந்து நேற்றைய தினம் விசேட நன்றி நவிழல் நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். கஹட்டோவிட்ட இமாம் ஷாபி நிலையத்தில் இந்த நிகழ்வு மிக விமரிசையாக நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் அனைவரும், மௌபியா டீச்சர் அவர்கள் தனது கடமைக் காலத்தில் காட்டிய அர்ப்பணிப்பு, ஆசிரியர் களுக்கு வழங்கிய வழிகாட்டல்கள் மற்றும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத் திற்காக அவர் ஆற்றிய பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

கல்வித்துறையில் ஒரு முன்மாதிரி ஆளுமையாகத் திகழ்ந்த அவரது ஓய்வுக்காலம் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் அமைய சக ஆசிரியர்கள் தமது வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

ஓய்வுபெறும் மௌபியா டீச்சரின் எதிர்கால வாழ்வு சிறக்க எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## மனநலமும் ஆலோசனையும் 96

# தாய்மை: முடிவில்லா அன்புப் பயணம்



தாய்மை வாழ்க்கையில் மிக அழகானது அதே நேரத்தில் சவால்கள் பலவற்றால் நிறைந்தது. தாய்மையின் பயணம் நிறைவுபெறாத ஒரு பயணமாகக் கருதப்படுகிறது.

ஒரு நல்ல தாயாக இருப்பதற்கு எந்த வழிகாட்டியும், கையேடும், அல்லது குறிப்பிட்ட விதிமுறைகளும் இல்லை. ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, ஒவ்வொரு குழந்தையால் தாய் பெறும் ஒவ்வொரு அனுபவமும் வேறுபட்டது.

குழந்தைக்கு குழந்தை அனுபவங்கள் மாறிச் செல்லும். ஒவ்வொரு நாளும் புதிய பாடங்களை கற்றுத் தரும். இதனால் தான், “வாழ்க்கை ஒரு கையேட்டுடன் வருவதில்லை அது ஒரு தாயுடன் வருகிறது” என்ற கூற்று மிகவும் ஆழமான அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது.

ஒரு தாய், குழந்தையின் பிறப்பிலிருந்து முதிர்ந்தவராகும் வரை, ஒரு உயிருடன் இருக்கும் வழிகாட்டியாக மாறுகிறாள்.

அவள் அறியாமலேயே கற்றுத் தருகிறாள். குழந்தைக்கு நடக்க கற்றுத்தரும் தருணங்கள், உண்ண உடுக்க சொல்லித்தரும தருணங்கள், தோல்வியின் போது ஆறுதல் கூறும் தருணங்கள், வெற்றியின் போது பாராட்டும் தருணங்கள்,

இப்படியாக அவள் வாழ்க்கையில் பல தருணங்களை சந்திக்கிறாள். பல பாத்திரங்களை ஏற்கிறாள். ஒரு ஆசிரியையாக, பாதுகாவலராக, ஆலோசகராக, உறுதியான ஆதரவாளராக தன்னை முன் வைக்கிறாள். இவை எல்லாம் கற்றுக் கொண்டு செய்யும் விடயங்கள் அல்ல. தாய்மையின் இருந்து கசியும் அன்பின் உணர்வுகள்.

ஒரு தாயின் முக்கியத்துவம் அவள் முழுமையானவளாக இருப்பதிலல்ல. அவள் எப்போதும் அருகில் இருப்பதில்தான் இருக்கிறது. அவளுக்கு எல்லா பதில்களும் தெரியாமல் இருக்கலாம். ஆனால் அவள் எப்போதும் தனது குழந்தைக்காக சிறந்ததை செய்ய முயல்கிறாள். அவள் வளரும்போது, அவளின் குழந்தையும் வளர்கிறது. அவளின் அனுபவங்கள், வாழ்க்கையின் மதிப்புமிக்க பாடங்களை கற்றுத் தருகின்றன. இந்தப் பாடங்கள் புத்தகங்களால் கற்றுக் கொடுக்க முடியாதவை. அவை செயல்களின் மூலம் மட்டுமே உணரப்படுகின்றன. “வாழ்க்கை ஒரு கையேட்டுடன் வருவதில்லை அது ஒரு தாயுடன் வருகிறது”, என்று சொல்லக் கேட்டிருக்கலாம். இந்த கூற்று புதியதாக குழந்தையை பெற்றெடுத்த ஒரு பெண்ணுக்கு, ஒரு நிம்மதியான செய்தியை வழங்குகிறது. அவள் போதுமானவள். அவள் முழுமையானவளாக இருக்க வேண்டிய அவசியமில்லை எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டியதும் இல்லை. அவளின் அன்பு, பரிவு, கவனிப்பு, முயற்சி இவையே முக்கியமானவை. அவள் சந்தேகத்திலும், பதட்டத்திலும் இருக்கும் நாட்களிலும் கூட, அவளின் இருப்பே குழந்தைக்கு ஒரு சிறந்த ஆசிரியராக இருக்கும்.

அதே நேரத்தில், இந்த கூற்று குழந்தைகள் – சிறியவர்களாக இருந்தாலும், பெரியவர்களாக வளர்ந்தாலும் – தங்களின் தாயை மதிக்க வேண்டும் என்பதையும் நினைவூட்டுகிறது.

ஒரு தாயின் அன்பு எப்போதும் இருப்பதால், அது பல நேரங்களில் கவனிக்கப்படாமல் போகிறது. அவளின் அன்பை அறிந்து, அவளின் தியாகங்களை உணர்ந்து, அவளின் முயற்சிகளை மதித்து, நன்றியுணர்வை வெளிப்படுத்துவது மிகவும் முக்கியம்.

தாய்மை என்பது எல்லாவற்றையும் சரியாக செய்வதல்ல, அன்புடன் எப்போதும் அருகில் இருப்பதுதாகும். அவளின் புனிதம் புரிந்து, அர்ப்பணம் தெரிந்து அவள் உணர்வுக்கு நெருங்கிய உறவை கொடுப்பதில் கணவரின் பங்கு மகத்தானது. தாயின் அன்பை உணர்ந்து, அவளின் அர்ப்பணிப்பை மதித்து, அவளுடன் உறவை பாதுகாப்பது ஒவ்வொரு குடும்பத்தினரின் பொறுப்பு. அப்போது தான், ஒரு குடும்பம் உண்மையான அர்த்தத்தில் நிறைவை அடையும்.




அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

---

## மங்கையொளி

பயாஸா பாஸில்

# நவீன உலகில் பிள்ளைகளை கையாள்வது எப்படி?




இன்றைய நவீன உலகம் வேகமாக மாற்றமடைந்து கொண்டிருக்கிறது. தொழில்நுட்ப வளர்ச்சி, சமூக ஊடகங்கள், புதிய வாழ்க்கை முறைகள் ஆகியவை குழந்தைகளின் எண்ணங்கள் மற்றும் நடத்தைகளை பெரிதும் பாதிக்கின்றன. இத்தகைய சூழலில், பிள்ளைகளை சரியான பாதையில் வழிநடத்துவது பெற்றோரின் முக்கிய பொறுப்பாகும்.

முதலில், பெற்றோர் தங்கள் பிள்ளைகளுடன் நண்பர்களைப் போல நடந்து கொள்ள வேண்டும். பயம் உண்டாக்கி கட்டுப்படுத்துவது இன்றைய காலத்தில் பயனுள்ளதாக இருக்காது. பிள்ளைகள் தங்கள் எண்ணங்கள், சந்தேகங்கள், பிரச்சினைகள் ஆகியவற்றை திறந்த மனதுடன் பகிரக்கூடிய சூழலை உருவாக்குவது அவசியம். இது பெற்றோர்-பிள்ளை உறவை வலுப்படுத்தும்.

அடுத்து, டிஜிட்டல் உலகை முறையாக கையாள வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். மொபைல், இணையம் போன்றவற்றை முழுமையாக தடை செய்வதற்குப் பதிலாக, அவற்றைப் பயன்படுத்தும் நேரத்திற்கும் உள்ளடக்கத்திற்கும் வரம்பு அமைக்க வேண்டும். இதன் மூலம் அவர்கள் நல்லதும் கெட்டதுமானவற்றை புரிந்து கொள்ளக் கற்றுக்கொள்வார்கள்.

மேலும், பிள்ளைகள் பேசும் போது கவனமாக கேட்பது மிகவும் முக்கியம். உடனே கண்டிப்பதற்குப் பதிலாக, அவர்கள் உணர்ச்சிகளை புரிந்து கொண்டு அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். இது அவர்களின் மனநல வளர்ச்சிக்கும் உதவும்.

அன்பும் ஒழுக்கமும் சமநிலையுடன் வழங்கப்பட வேண்டும். அதிக சுதந்திரம் கொடுத்தாலும் அது தவறான வழிக்குத் தள்ளக்கூடும் அதே சமயம் அதிக கட்டுப்பாடும் அவர்களை மனஅழுத்தத்திற்கு உள்ளாக்கும். எனவே, அன்போடு ஒழுக்கத்தை இணைத்து வளர்ப்பது சிறந்தது.

மேலும், பிள்ளைகளை மற்றவர்களுடன் ஒப்பிடுவது தவிர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தனித்திறன் கொண்டவர்களாக இருக்கின்றனர். அவர்களின் திறமைகளை ஊக்குவித்து, தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும்.

இத்துடன், பெற்றோர் தாங்களே நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும். பெற்றோர் காட்டும் நடத்தை, பழக்கம், மதிப்புகள் ஆகியவற்றை பிள்ளைகள் பின்பற்றுவார்கள். எனவே, ஒழுக்கமான வாழ்க்கை முறையை அவர்கள் முன்வைக்க வேண்டும்.

இறுதியாக, பிள்ளைகளுடன் தரமான நேரம் செலவிடுவது மிக அவசியம். அவர்களுடன் பேசுதல், விளையாடுதல், அவர்களின் ஆர்வங்களை பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவை உறவை மேலும் வலுப்படுத்தும்.

முடிவாக, நவீன உலகில் பிள்ளைகளை வளர்ப்பது சவாலானதாக இருந்தாலும், அன்பு, பொறுமை, புரிதல் ஆகியவற்றின் மூலம் அவர்கள் நல்ல மனிதர்களாக உருவாக முடியும். பெற்றோரின் சரியான வழிகாட்டுதலே அவர்களின் எதிர்காலத்தை ஒளிரச் செய்யும்.




அரபாத் ஹஹர்தீன்

# நியூசிலாந்து ஏ அணிக்கு வெள்ளையடித்து தொடரை வெற்றி கொண்டது இலங்கை ஏ அணி

சுற்றுலா நியூசிலாந்து ஏ அணிக்கு எதிரான 3ஆவதும், இறுதியுமான ஒருநாள் போட்டியில் 4 விக்கெட்டுக்களால் இலகு வெற்றி பெற்ற இலங்கை ஏ அணி தொடரை 3:0 என வெள்ளையடித்துக் கைப்பற்றியது.
இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இலங்கை ஏ அணிக்கு எதிராக உத்தியோகபூர்வமற்ற 3 ஒருநாள் மற்றும் 4 நாட்கள் கொண்ட இரண்டு உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ளது நியூசிலாந்து ஏ அணி.
அதற்கமைய முதலில் ஆரம்பித்த 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் இரு போட்டிகளிலும் இலங்கை ஏ அணி வெற்றி பெற்று தொடரை தன்வசப் படுத்தியிருக்க 3ஆவதும், இறுதியுமான போட்டி நேற்று (11) ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்றது.
இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து ஏ அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 302 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் முஹம்மட் அப்பாஸ் ஆட்டமிழக்காமல் 110 ஓட்டங்களை விளாசி யிருந்தார். அவருடன் மெத்யூவ் பொய்ல் 85 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் விஜயகாந்த் வியாஸ்காந்த் 2 விக்கெட்டுகளையும், முஹம்மட் சிறாஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தியிருந்தார்.
பின்னர் 303 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றி இலக்கு நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு கமில் மிஷார 83 ஓட்டங்களையும், பவன் ரத்நாயக்க 77 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்திருக்க , அஹான் விக்ரமசிங்க ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களைச் சேர்த்துக் கொடுக்க இலங்கை ஏ அணி 46.2 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 303 ஓட்டங்களைந் பெற்று 4 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியைப் பதிவு செய்ததுடன், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3:0 என வெள்ளை யடித்துக் கைப்பற்றியது.
பந்துவீச்சில் நியூசிலாந்து ஏ அணி சார்பில் சிமோன் கீணி 4 விக்கெட்டுக்களையும், டிம் பிறிங்லி 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தனர்.
மேலும் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட 4 நாட்கள் உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 16ஆம் திகதி ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலக கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தில் சமரி அத்தபத்துவுக்கு முக்கிய இடம்




உலக கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் வீரர்கள் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவி சமரி அதபத்து நியமிக்கப்பட்டுள்ளார்.
இது இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது.
சமரி அதபத்துவுடன் இணைந்து ஆப்கானிஸ்தானின் ரஷீத் கான், இத்தாலியின் வேன் மேட்சன், நியூசிலாந்தின் டேரில் மிட்செல் மற்றும் மேடி கிரீன் ஆகியோரும் இந்தப் புதிய குழுவில் இணைந்துள்ளனர்.
ஓய்வுபெற்ற நியூசிலாந்து வீரர்களான டிம் சவுதி மற்றும் சோஃபி டிவைன் ஆகியோருக்குப் பதிலாக இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
இந்தக் குழுவில் ஏலவே பெட் கம்மின்ஸ், ஜேசன் ஹோல்டர், ஹீதர் நைட் போன்ற முன்னணி சர்வதேச வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

# இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திடம் மன்னிப்புக் கோரினார் நுவன் துஷார



2026 இந்தியப் பிரீமியர் லீக் (ஐீடு) தொடரில் பங்கேற்பதற்கான தடையின்மைச் சான்றிதழை (ழேஊ) வழங்காமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தமைக்காக, இலங்கை கிரிக்கெட் வீரர் நுவான் துஷார, சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்திடம் மன்னிப்பு கோரியுள்ளார்.
சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அத்துடன், சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்திற்கு எதிராகத் தான் தாக்கல் செய்த மனுவை மீளப் பெற்றுக்கொள்ள விரும்புவதாகவும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# சம்பியன்ஸ் கிண்ண இறுதிப் போட்டியில் சோண்டர்ஸை வீழ்த்தி மகுடம் சூடியது சென். மேரிஸ்




இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் நடத்திய 'சம்பியன்ஸ் கிண்ண' (Champions Cup) நொக்-அவுட் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில், யாழ்ப்பாணம் நாவாந்துறை சென். மேரிஸ் கழகம், பலம் வாய்ந்த சோண்டர்ஸ் கழகத்தை வீழ்த்தி மகுடம் சூடியுள்ளது.
கொழும்பு "குதிரைப் பந்தயத் திடல் சர்வதேச கால்பந்தாட்ட மைதானத்தில்" நடைபெற்ற இந்த விறுவிறுப்பான இறுதிப் போட்டியில், இலங்கையின் பாரம்பரியமிக்க சோண்டர்ஸ் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் கழகம் களமிறங்கியது. ஆட்டம் தொடங்கிய 3ஆவது நிமிடத்திலேயே சென். மேரிஸ் வீரர் டஞ்சுமா கம்பாரி மின்னல் வேகத்தில் ஒரு கோலை அடித்துத் தனது அணிக்கு ஆரம்பத்திலேயே முன்னிலை தேடித்தந்தார்.
இருப்பினும், அடுத்த இரண்டு நிமிடங்களி லேயே சோண்டர்ஸ் வீரர் க்ளோவிஸ் ப்ராங்க் ஒரு பதில் கோலை அடித்து ஆட்டத்தைச் சமன் செய்தார். ஆட்டத்தின் எஞ்சிய பகுதியில் இரு அணிகளும் வெற்றி கோலை அடிக்க கடுமையாகப் போராடிய போதிலும், இரு தரப்பு கோல்காப்பாளர்களும் மிகத் திறமையாகச் செயற்பட்டு கோல் முயற்சிகளை முறியடித்தனர்.
நிர்ணயிக்கப்பட்ட நேர முடிவில் ஆட்டம் 1:1 எனச் சமநிலையில் முடிந்ததை அடுத்து, வெற்றியாளரைத் தீர்மானிக்க பெனல்டி அவுட் முறை அமுல்படுத்தப்பட்டது.
இதன்போது சென். மேரிஸ் கழகத்தின் கோல்காப்பாளர் எஸ். ஆர்னிகன் ஒரு கதாநாயகனாகத் திகழ்ந்தார். சோண்டர்ஸ் கழகம் உதைத்த மூன்று பெனல்டிகளைத் தனது அசாத்திய திறமையால் தடுத்து நிறுத்திய அவர், தாமே ஒரு பெனல்டியை கோலாக மாற்றி 3:1 என்ற கோல்கள் கணக்கில் தனது அணிக்கு வரலாற்று வெற்றியை உறுதி செய்தார்.
இந்த வெற்றியின் மூலம், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் பிரதான கழகங்களுக்கு இடையிலான தொடர் ஒன்றில் சம்பியனான முதலாவது வடக்கு-கிழக்கு அணி என்ற வரலாற்றுச் சாதனையை நாவாந்துறை சென். மேரிஸ் கழகம் படைத்துள்ளது. சென். மேரிஸ் கழகத்தின் பயிற்றுவிப்பாளராக ரத்னம் ஜெஸ்மின் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரி20 கிரிக்கெட்டில் புதிய வரலாறு படைத்த பிரேசில் வீராங்கனை




பிரேசில் மகளிர் அணியின் வீராங்கனை லாரா கார்டோசோ, சர்வதேச இருபதுக்கு இருபது போட்டி ஒன்றில் ஒரே இன்னிங்ஸில் ஒன்பது விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
இதுவரை ஆடவர் அல்லது மகளீர் பங்கு பற்றி சர்வதேச இருபதுக்கு இருபது போட்டிகளில் இதுவரை யாரும் ஒன்பது விக்கெட்டுகளை வீழ்த்தியதில்லை.
லெசோதோ அணிக்கு எதிரான போட்டியில் மூன்று ஓவர்களில், இரண்டு மெய்டன் ஓவர்கள் உட்பட வெறும் நான்கு ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து ஒன்பது விக்கெட்டுகளை வீழ்த்தினார்.
21 வயதான லாரா கார்டோசோ, முதல் ஓவரிலேயே ஹாட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்தினார். இரண்டாவது ஓவரில் நான்கு விக்கெட்டுகளையும், மூன்றாவது ஓவரில் இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்.
முதலில் துடுப்பெடுத்தாடியிருந்த பிரேசில் அணி, 203 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது. இருப்பினும், லெசோதோ அணி 6.2 ஓவர்களில் வெறும் 13 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் பிரேசில் அணி 189 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
முன்னதாக பூட்டானிய வீரர் சோனம் யேஷே 2025ஆம் ஆண்டு எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தியமையே சாதனையாக இருந்திருந்தமை குறிப்பிடத்கதக்து.